இரண்டாவதாகப் பேசப்படும் நூர் என்னும் பதத்திற்கு உவமை சொல்லப்படுவதைக் காண முடிகிறது. இதை அல்லாஹ் தனக்கு உவமைபடுத்துவதாக யாரும் நினைத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் அவன் தனது செயல்பாடுகளைத்தான் உவமைபடுத்திப் பேசுவானே அன்றி தன்னை ஒருபோதும் எதற்கும் உவமைபடுத்திப் பேச மாட்டான். காரணம் அல்லாஹ் உவமைகளை விட்டும் மிக மிகப் பரிசுத்தமானவன் என்பதே இஸ்லாமியக் கொள்கையாகும். அப்படியானால் இப்போது இங்கே சொல்லப்படுகின்ற உவமையை முதல் நூருக்கு வழங்கப்பட்ட விளக்கத்தோடு இணைத்துப் பாருங்கள்.

"அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" அல்லாஹ் வானம் பூமியிலுள்ளோர்களுக்கு நேர்வழி காட்டுபவன் என்பதாகப் பொருள் கொள்ளப்பட்டால் "மஸலு நூரிஹி" அந்நேர்வழி காட்டுதலுக்கு உவமையானது என்பது இங்கே பொருளாகும்.

பின்னும் அல்லாஹ்வுடைய நேர்வழி காட்டுதலுக்கு உவமை சொல்லப்படுவதாகச் சொல்லப்பட்டால் அவன் எதைக்கொண்டு நேர்வழி காட்டுகிறானோ அதற்குத்தான் இங்கே உதாரணம் சொல்கிறான். அல்லது எவரைக் கொண்டு நேர்வழி காட்டுகிறானோ அவருக்குத்தான் உதாரணம் சொல்கிறான். ஆகையால் இங்கே உதாரணப்படுத்தப்படும் பொருள் எது? அல்லது உதாரணமாக்கப்படுபவர் யார்?

மேலும் யாருடைய உதவியுமின்றி எதையும் சுயமாகச் செய்வதற்குரிய சர்வ வல்லமை கொண்டவன் தான் அல்லாஹ். அவனையன்றி எந்தவொரு சிருஷ்டிக்கும் சுயமாக ஒன்றைச் செய்வதற்குரிய ஆற்றலோ அதிகாரமோ அறவே கிடையாது. இருப்பினும் ஒவ்வொரு காரியத்தைச் செய்வதற்கும் ஒருவர் அவனால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதால் இங்கே நேர்வழி காட்டுவதற்காகவென்று அல்லாஹ்வைக் கொண்டு நபிமார்களும் ரஸூல்மார்களும் அவனால் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பதை எவராலும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ ஒருக்காலும் முடியாது என்னும்போது இப்போது இவ்வசனத்தில் உதா



ரணப்படுத்தப்படுபவர் யார் என்பது உங்களுக்கு மிக நன்றாகப் புரிந்திருக்குமென்று நினைக்கிறோம். ஆம். அவர்கள் தான் நமது நாயகம் ஸர்காரே தோ ஆலம், ஸர்வரே காயினாத், கருணைக் கடல், காத்தமுன் நபி, இறைவனின் பேரொளி, இருளகற்றும் நாதர், ஈருலகின் இதய வேந்தர் அஹ்மத் முஸ்தபா முஹம்மத் முஜ்தபா ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வ ஸல்லம் அவர்களாகும் என்பதில் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தைச் சார்ந்தோருக்கு சிறிது கூடச் சந்தேகமில்லை. இவையனைத்தும் அக்லிய்யத்தான (அறிவார்த்தமான) ஆதாரங்களாகும். இனி நக்லிய்யத்தான (குர்ஆன் ஹதீத் என்னும் சுருதிப் பிரமாணங்களுக்குரிய) ஆதாரங்களைப் பாருங்கள்.

**மஸலு நூரிஹி :-**

**"ஸய்யிதுனா இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸய்யிதுனா கஃபுல் அஹ்பார் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இவ்வசனம் எதைக் குறிக்கின்றதெனக் கேட்க, அதற்கவர்கள்; நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் குறிப்பிடுகிறதென்று சொன்னார்கள்.**

**பின்னும் கஃபுல் அஹ்பார் ரலியல்லாஹு அன்ஹுவைத் தவிர ஸய்யிதுனா ஸயீத் பின் ஸுபைர், ஸய்யிதுனா இப்னு ஜரீர், ஸய்யிதுனா இப்னுல் அன்பாரி, ஸய்யிதுனா இப்னு அதிய்யா, ஸய்யிதுனா முஹம்மத் பின் கஃப், ஸய்யிதுனா இப்னு உமர், ஸய்யிதுனா முஹ்ஹாக் ரலியல்லாஹு அன்ஹும் போன்ற பெரும் பெரும் தாபியீன்களும் இவ்வசனத்தில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனிதமிக்க முபாரக்கான தாத்துக்கே உவமைபடுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்."**

عن عبدبن حميد وابن جرير وابن المنذر وابن ابى حـــاتم
وابن مردويه عن شمرة بن عطية قال: جاء ابن عباس رضى
الله عنهما الى كعب الاحبار رضى الله عنه فقال حدثني عن

قول الله تعالى: الله نور السموات والارض مثل نوره: قال مثل نور محمد صلى الله عليه وآله وسلم

**"அப்து பின் ஹுமைத், இப்னு ஜரீர், இப்னுல் முன்திர், இப்னு அபீ ஹாத்திம், இப்னு மர்துவிய்யா, ஆகியோர் ஸமுரா பின் அதிய்யா ரலியல்லாஹு அன்ஹுவைக் கொண்டு அறிவிப்பதென்ன எனில் ஸய்யிதுனா இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸய்யிதுனா கஃபுல் அஹ்பார் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வருகைதந்து "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி மஸலு நூரிஹி" என்னும் வசனத்திற்குரிய விளக்கத்தைக் கேட்டபோது, அதற்கவர்கள்; அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பதாகப் பதில் தந்தனர்."** (தப்ஸீர் துர்ருல் மன்தூர், பாகம்-6, பக்கம்-198. இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ்)

மேலும் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரயீஸுல் முபஸ்ஸிரீன் - வேத விரிவுரையாளர்களின் தலைவர் எனப் போற்றப்படுபவர்கள். இவர்களே கஃபுல் அஹ்பாரிடம் இவ்வசனத்திற்கு விளக்கம் கேட்கின்றனர் என்றால் இந்த க்ஃபுல் அஹ்பார் என்பவர் யார் தெரியுமா? இவர் மிக மிகப் பிரச்சித்தி பெற்ற தாபியீன்களில் ஒருவராகும். இவரது முழுப்பெயர் 'அபூ இஸ்ஹாக் கஃபிப்னி கானிஃ பின் மைனூஃ" என்பதாகும். இவர் அரபிய வம்சத்தினரில் மிகவும் பிரச்சித்திப்பெற்ற "ஹிம்யர்" என்னும் வம்சத்தைச் சேர்ந்தவராகும்.

**இவர்கள் இஸ்லாத்தை ஏற்குமுன் யூதர்களிடையே பிரபலமான பேரறிஞர்களில் ஒருவராக இருந்ததால் அஹ்பார் என்றழைக்கப்பட்டார்கள். இவர்கள் நபியவர்களின் காலத்தில் வாழ்ந்தும் அவர்களை சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்காது போனதால் ஸய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் இஸ்லாத்தைத் தழுவினார்கள். அத்துடன் ஸய்யிதுனா உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்**



**களின் காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியதாகவும் ஒரு தகவலுண்டு.** (நூல் : தஹ்தீபுல் அஸ்மாயி வல்லுகாத்)

இன்னும் இவர்களால் அறிவிக்கப்படும் ஹதீத்கள் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது அறிவிப்புக்களில் உள்ள ஹதீதுகளுக்கு ஒப்பானதென்றே சொல்லலாம். மேலும் ஹழ்ரத் ஸய்யிதுனா உமர் பாரூக், ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு அப்பாஸ், ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ ஹுரைரா, ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல்லாஹ் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹும் போன்ற பெரும் பெரும் நபிமணித் தோழர்களிடமிருந்தும், பிரபலமான பெரும் எண்ணிக்கையைக் கொண்ட தாபியீன்களிடமிருந்தும் இவர்கள் பல ஹதீதுகளை அறிவித்துள்ளனர். மேலும் இமாம் புகாரி, இமாம் முஸ்லிம், இமாம் நஸாயி, இமாம் அபூதாவூத் ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரும் இவர்களால் அறிவிக்கப்பட்ட ஹதீதுகளை தமது நூல்களில் பதிவு செய்துள்ளனர். இதில் இமாம் அபூதாவூத் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இவர்களைப் பற்றி.,,,

**"அவர் அறிவுகளை உடையவர், நம்பிக்கைக் குரியவர், நிறைந்த ஞானங்களைப் பெற்றவர் என்பதில் அறிஞர் பெருமக்கள் ஒருங்கிணைந்துள்ளனர் எனக் குறிப்பிடுகின்றார்கள்."**

(நூல்: தஹ்தீபுல் அஸ்மாயி வல்லுஃகாத்)

இவர்கள் ஹிஜ்ரி 32ல் ஹிம்முஸ் என்னுமிடத்தில் இறையடி சேர்ந்து அங்கேயே நல்லடக்கமும் செய்யப்பட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அத்துடன் சூரா அந்நூரின் 35ம் வசனத்தில் சொல்லப்பட்ட உவமை நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் குறித்துத்தான் என்று சொன்னவர்களில் ஹழ்ரத் ஸய்யிதுனா ஸயீத் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஒருவராகும்.

இவர் ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மாணவரும் பிரச்சித்திப் பெற்ற தாபியீன்களில் ஒருவருமாகும். இன்னும் இவர்

ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு அப்பாஸ், ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு உமர், ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ மஸ்வூதில் அன்ஸாரி, ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ ஹுரைரா, ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ ஸயீதுல் குத்ரீ, ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ மூஸா அல் அஷ்அரி, ஹழ்ரத் ஸய்யிதுனா ழஹ்ஹாக் ரலியல்லாஹு அன்ஹும் போன்ற புனிதமிகு நபித்தோழர்க்ளிடமிருந்தெல்லாம் ஹதீதுகளை அறிவித்துள்ளார்.

ஹழ்ரத் ஸயீத் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பற்றி ஹழ்ரத் இப்னு ஹிப்பான் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்.,,,

**"ஹழ்ரத் ஸயீத் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹதீதுகளை அறிவித்தோரில் நம்பிக்கைக்குரிய ஒருவராகவும், சட்ட நிபுணராகவும், ஸுஹ்தும் தக்வாவும் உடையவராகவும் இருந்தனர் என்று கூறுகின்றனர்."** *(நூல் : தஹ்தீபுத் தஹ்தீப்)*

**"ஹழ்ரத் ஸயீத் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாமியர்களுக்கு மாபெரும் நம்பத்தகுந்த ஆதாரமாகும் என்கின்றனர் இமாம் அபூ காசிம் திப்ரீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள்."**
*(நூல் : தஹ்தீபுத் தஹ்தீப்)*

**"ஹழ்ரத் ஸயீத் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது ஞானங்களின் பால் தேவையாகாத எவரும் இப்புவியில் இல்லை என ஹழ்ரத் உமர் பின் மைமூன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது தந்தை சொல்லக் கேட்டதாகக் கூறுகின்றனர்."**
*(நூல் : தஹ்தீபுத் தஹ்தீப்)*

ஆக இவ்வசனத்தில் அக்லிய்யத்தான (அறிவார்த்தமான) ஆதாரங்களைக் கொண்டும் நக்லிய்யத்தான (கருதி பிரமாணங்களின்) ஆதாரங்களைக் கொண்டும் நாம் புரிந்து கொள்ள வேண்டிய விஷயத்தின் சாரம்சம் என்னவெனில்.,,,

"மஸலு நூரிஹி" என்றால் "ஸல்லல்லாஹு அலைஹி



வஸல்லமவர்களின் நூருக்கு உதாரணமாவது" என்பதாக நூர் என்னும் பதத்தை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு இணைத்துப் பொருள் தரலாம். அல்லது,

"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு உதாரணமாவது" என்றும் பொருள் கொடுக்கலாம். இந்நிலையில் நபியவர்களை உதாரணப்படுத்தும் போது அதில் இடம் பெற்றுள்ள ழமீரானது அல்லாஹ்வை நோக்கி மீளும். அதாவது,

"அல்லாஹ்வின் நூராகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு உதாரணமாவது" என்பதாகப் பொருள் அமையும்.

**வசனம் இரண்டு :-**

قد جائكم من الله نور و كتاب مبين

**"திடனாக அல்லாஹ்விடமிருந்து நூரும் கிதாபும் வந்து விட்டது."** (சூரா மாயிதா, வசனம்-15)

இந்த வசனமும் வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நூரானவர்களே என்னும் கருத்தை மேலும் உறுதிப்படுத்துகின்ற ஓர் ஆதாரமாகும். அதே நேரம் இவ்வசனத்தைக் கொண்டு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது அகமியம் எடுத்துக் காட்டப்படுவதை ஜீரணித்துக் கொள்ள முடியாத வஹ்ஹாபிகள் நூர் என்பதும் கிதாப் என்பதும் குர்ஆனைத் தான் குறிக்குமென்று கூக்குரலிடுகின்றனர். இது இஸ்லாமிய முன்னோர்களில் எவருமே சொல்லாத ஒரு புதுமையான விளக்கமாகும். இனி இவ்விரு வசனங்களிலும் பேசப்படுகின்ற நூர் என்னும் பதம் பாராளும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் தான் குறித்துக் காட்டுகிறது என்பதை ஆதாரப்படுத்துவதற்காக நாம் எடுத்துக் கொண்ட நூல்களைப் பாருங்கள்.

**நூரும் குர்ஆனின் விரிவுரையாளரும் :-**

1. தப்ஸீர் ஸமர்கந்தீ, இமாம் இப்ராஹீம் ஸமர்கந்தீ - 375

*2. தப்ஸீர் நஸபீ, இமாம் நஸபீ - 701*

*3. அல் ஜவாஹிருல் ஹஸ்ஸான் ஃபீ தப்ஸீரில் குர் ஆன், இமாம் தஆலபீ - 875*

*4. அய்ஸருத் தபாஸீர் லிகலாமில் அலிய்யில் கபீர், இமாம் அல் ஜஸாயிர்*

*5. ஃபத்ஹுல் கதீர், அல்லாமா ஷௌக்கானி - 1250*

*6. ஹாஷியத்துஷ் ஷிஹாப், அல்லாமா ஷிஹாபுத்தீன் அல் குஃப்பாஜி - 1069*

*7. தப்ஸீருல் மன்னார், முஹம்மத் ரஷீத் ரழா*

*8. தப்ஸீர் அல் மாவரூதி, அல்லாமா அல் மாவரூதி - 450*

*9. தப்ஸீர் அத்தஹ்ரீர் வத்தன்வீர், அல்லாமா தாஹிர்*

*10. அத்தப்ஸீருல் கபீர், அல்லாமா ராஸி - 606*

*11. ஹாஷியா அல் ஜமலுல் ஜலாலைன்,. அல்லாமா சுலைமானுல் ஜமல் - 1204*

*12. தப்ஸீருல் பஃகவீ, அல்லாமா பஃகவீ - 516*

*13. அத்தப்ஸீருல் முனீர், உஸ்தாத் வஹ்பா அர்ரகிலி*

*14. அல் ஜாமிவுல் அஹ்காம், அல்லாமா குர்துபி - 671*

*15. ரூஹுல் மஆனி, அல்லாமா ஆலூஸி - 127*

*16. ரூஹுல் பயான், அல்லாமா பரோஸி - 1137*

*17. ஜாமிவுல் பயான், அல்லாமா தப்ரீ - 210*

*18. கிதாபுல் வஜீஸ் ஃபீ தப்ஸீரில் குர்ஆன், அல்லாமா அல் வாஹிதி - 468*

*19. மராஹ் லபீத் தப்ஸீர் நவவி, அல்லாமா ஜாவீ*

*20. தப்ஸீர் பைழாவீ, அல்லாமா பைழாவீ - 791*

*21. அத்துர்ருல் மன்தூர், அல்லாமா சுயூத்தி - 911*

*22. தப்ஸீர் ஜலாலைன், அல்லாமா சுயூத்தி - 911*

*23. தப்ஸீருல் காஸின், அல்லாமா இப்ராஹீம் அல் பக்தாதி - 725*

அல்லாஹ்வைக் கொண்டு முதன் முதலாக ஜோதியாகப் படைக்கப்பட்டு ஜொலித்துக் கொண்டிருந்தவர் தான் பஷரிய்யத்துடைய ரஸூலாக வருகை தந்திருக்கிறார். அதை ஊர்ஜிதப்படுத்தவே தெளிவான வேதமும் வந்துள்ளது என்பதாக ஸூஃபிய்யாக்கள் கூறுகின்றனர்.

**வசனம் மூன்று :-**

يريدون ليطفئوا نورالله بافواههم والله متم نوره ولو كره الكافرون



**"அவர்கள் அல்லாஹ்வுடைய நூரை தமது வாயால் ஊதி அணைத்து விடலாம் எனக் கருதுகின்றனர். காபிர்கள் வெறுப்படைந்த போதிலும் அவன் தனது நூரை பூரணப்படுத்துபவனாகவே இருக்கிறான்."**
*(சூரா அஸ்ஸஃப், வசனம்-8. சூரா அத்தௌபா, வசனம்-32.)*

**"இவ்வசனத்தில் நூருல்லாஹ் (அல்லாஹ்வின் நூர்) என்பது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களாகும்."** *(நூல்: தப்ஸீர் இப்னு ஜரீர், தப்ஸீர் நஸஃபீ, பாகம்-1, பக்கம்-619. தப்ஸீர் கஷ்ஷாஃப், பாகம்-2, பக்கம்-186. தப்ஸீர் அத்துர்ருல் மன்தூர், பாகம்-4, பக்கம்-175.)*

**வசனம் நான்கு :-**

يايهاالنبي إنا أرسلناك شاهدا ومبشرا ونذيرا وداعيا الى الله بإذنه وسراجا منيرا

**"ஓ! மறைவானவற்றை அறிவிப்பவரே! நாம் உம்மை ஹாழிராகவும் நாழிராகவும் சுபச்செய்தி தருபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அல்லாஹ்வின் கட்டளையைக் கொண்டு அவன்பால் அழைப்பவராகவும் பிரகாசமான ஒளியாகவும் அனுப்பியுள்ளோம்."** *(சூரா அஹ்ஸாப், வசனம்-45,46.)*

**வசனம் ஐந்து:-**

والضحى والليل إذا سجى

**"முற்பகல் மீது சத்தியமாக ஒடுங்கிக் கொள்ளும் இரவின் மீது சத்தியமாக"** *(சூரா அழ்முஹா, வசனம்-1)*

இந்த வசனத்திற்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நூருக்கும் என்ன தொடர்பு என்று யோசிக்கின்றீர்களா? இதோ அதற்குரிய பதிலைப் பாருங்கள்,...

هل أحد من المذكرين فسرالضحى بوجه محمد صلى الله عليه وآله وسلم والليل بشعر صلى الله عليه وآله وســلم.

نعم. ولا استبعاد فيه

"அழ்முஹா என்னும் பதம் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருவதனமும், லைல் என்னும் பதம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் முபாரக்கான திருமுடியும் தான் என்பதாக எவரேனும் விளக்கமளித்துள்ளனரா? ஆம்." *(நூல் : தப்ஸீர் கபீர்)* இவ்வாறே,

لااستبعاد فيما يذكره الواعظ من تشبيه وجه محمد صلى الله عليه وآله وسلم بالضحى وشعره بالليل

"முஹா என்னும் பதத்தை நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் முபாரக்கான திருவதனத்திற்கும், லைல் என்னும் பதத்தை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் முபாரக் கான திருமுடிக்கும் உவமைப்படுத்தலாம்." *(நூல்: தப் ஸீர் நைஷாபூரி, அஸ்ஸீரத்துல் ஹலபிய்யா, பாகம்-1, பக் கம்-95. அஷ்ஷிஃபா.)*

**வசனம் ஆறு :-**

والنجم اذا هوى

"ஏறி இறங்கும் நட்சத்திரத்தின் மீது சத்தியமாக" *(சூரா அந்நஜ்ம், வசனம்-1)*

النجم هو محمد صلى الله عليه وآله وسلم

"நட்சத்திரம் என்பது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களாகும்." *(நூல் : அஷ்ஷிஃபா, பாகம்-1, பக்கம்-23. தப்ஸீர் காஸின், பாகம்-6, பக்கம்-212. தப்ஸீர் பஃகவீ, பாகம்-4, பக்கம்-244. தப்ஸீர் ஸாவி.)*

**வசனம் ஏழு :-**

والسماء والطارق. وما ادراك ما الطارق. النجم الثاقب



"வானத்தின் மீது சத்தியமாக! தாரிக் மீதும் சத்தி யமாக தாரிக் என்னவென்பதை உமக்கு அறிவித்தது எது? அது இலங்கும் நட்சத்திரமாகும்" *(சூரா அத்தாரிக், வசனம்-1)*

إن النجم هنا أيضا محمد صلى الله عليه وآله وسلم

"இங்கே நட்சத்திரம் என்றால் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களேயாகும்" *(நூல் : அஷ்ஷிஃபா, நஸீமுர்ரியாழ்)*

மேற்கண்ட வசனங்களனைத்தும் நமது நாயகம் ரஸூலே அக்ரம் ஸர்வரே காயினாத் ஸர்காரே தோ ஆலம் ஹபீபே முஸ்தபா முஹம்மத் முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒளிமயமானவர்கள் (நூர்) என் பதை நிரூபிப்பதற்காக உங்களின் பார்வைக்குத் தரப்பட்ட திருமறை வசனங்களாகும்.

## நான் உங்களைப் போன்றவனல்ல

சர்வ சக்தனாகிய அல்லாஹ் ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைப் படைத்து அவர்களுக்கு மரியாதை செலுத்துமாறு வானவர்களுக்குக் கட்டளையிட, இப்லீஸைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அவர்களுக்கு மரியாதை செலுத்தினர். இப்லீஸ் மரியாதை செலுத்தாததால் அவன் அல்லாஹ்வின் சாபத்திற்குள்ளாகி இரு உலகிலுமுள்ள வானவர் மற்றும் முஃமின்களது விரோதியாகவும் ஆக்கப்பட்டான்.

எல்லா வானவர்களும் மரியாதை செலுத்த இப்லீஸ் மட்டும் மரியாதை செலுத்தாமல் போனதற்குரிய காரணமென்ன என்பதை யோசித்தால் மனித இனத்தில் ஒருவராக ஆதம் நபியவர்கள் படைக்கப்பட்ட பின் அவரை ஒரு மனிதரென்று மட்டும் பார்க்காமல் அவ்வானவர்கள் அவர்களுக்குள் இருந்த ஸஃபிய்யுல்லாஹ்வையும் பார்த்தனர். ஆதலினாலேயே அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து மரியாதை செலுத்தினர். ஆனால் இப்லீஸ் அவர்களை ஒரு மனிதராக மட்டுமே பார்த்தான். அன்றி அவர்களுக்குள் ஜொலித்துக் கொண்டிருந்த ஸஃபிய்யுல்லாஹ்வைக் பார்க்காததால் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிய மறுத்தான்.

இதுபோன்றே ஹாபீல் என்பவர் தமது தந்தையான ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை ஒரு மனிதராகக் கண்டாலும் அவருக்குள்ளிருந்த ஸஃபிய்யுல்லாஹ்வையும் கண்டதால் அவர் அல்லாஹ்வுக்கு அடிபணிந்த நல்லடியாரானார். ஆனால் அதே ஆதமின் இன்னொரு பிள்ளையான



காபீல் என்பவன் தமது தந்தைய்யை வெறும் மனிதராக மட்டுமே கண்டதால் முடிவில் இப்லீஸின் கூட்டாளியானான்.

இன்னும் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை நம்ரூத் என்னும் கொடுங்கோலன் தன்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதராகப் பார்த்தானே அன்றி அவருக்குள் இருந்த கலீலுல்லாஹ்வை காணவில்லை. இதனால் இவனும் இப்லீஸின் கூட்டாளியானான்.

இவ்வாறே ஹழ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களை ஃபிர்அவ்ன் என்னும் ஆணவக்காரன் தன்னைப் போன்றே ஒரு சாதாரண மனிதராகக் கண்டானேயன்றி அவுர்களுக்குள் இருந்த கலீமுல்லாஹ்வை அவுன் காணவில்லை. ஆதலால் அவனும் இப்லீஸின் தோழனானான்.

இவ்வண்ணமே ஹழ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களை ஸலஃபிய்யீன்கள் என்போர் அவர்களுக்குள் இருந்த ரூஹுல்லாஹ்வைக் காணாததால் அவர்களும் இப்லீஸின் நண்பர்களாயினர்.

இதேபோல நமது நாயகம் ஹழ்ரத் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை அபூஜஹ்லும் அவனது கூட்டத்தாரும் தமக்கு நிகரானதொரு மனிதராகக் கண்டார்களேயன்றி அப்பேரொளிக்குள் இருந்த நூருல்லாஹ்வைக் காணவில்லை. விளைவு! முடிவில் இவர்களும் அந்த இப்லீஸின் ஆப்த நண்பர்களாகிப் போயினர்.

இந்த இடத்தில் நபியவர்களின் மகத்துவத்தை பார்க்க மறுப்போர் (வஹ்ஹாபிகள்) அபூஜஹ்லும் அவனது கூட்டத்தாரும் நபித்துவத்தை பகிரங்கமாக எதிர்த்ததாலும் மறுத்ததாலும் தான் காபிர்களாகிப் போனார்களென்று சொல்வார்களாயின், நுபுவ்வத் என்பது நமது நபியவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஒரு கிரீடமாகும். அதை மறுத்ததால் தான் அவர்கள் அல்லாஹ்வின் விரோதிகளாயினர் என்பதையாவது நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? அப்படியானால் இங்கே நபி வேறு நபித்துவம் வேறு என்று சொல்கிறீர்களா?

ஆனால் நபியவர்களை ஒரு சாதாரண மனிதராகக் கண்டதால் தான் அவர்களது எல்லா நிலைகளையும் பொய்யாக்கினர். அதேநேரம் நபியவர்களை நபியென்றும், ரஸூலென்றும் ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களின் எதார்த்தத்தை ஏற்க மறுக்கிறீர்களே. அப்படியானால் நீங்கள் யார்? நபியவர்களின் மகத்துவத்தை எடுத்துச் சொல்லும்போது எல்லைமீறி அளவுகடந்துப் புகழ்வதாகச் புலம்பும் நீங்கள் யார்? நாங்கள் தான் முனாபிக்கீன்கள் - நயவஞ்சகர்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா? இன்னும் இவர்கள் அபூஜஹ்லை விடக் கொடியவர்கள் என்பதும் பொய்யா? என்றால் அதற்கிவர்கள்,...

அல்லாஹ்வே தனது மாமறையில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை "பஷருன்" (மனிதர்) என்று சொல்கிறானே. அப்படியானால் நாமும் சொல்லலாமல்லவா என்று கேட்கின்றனர்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மனிதரென்று சொல்லக்கூடாதென்று எப்போது சொன்னோம்? நம்மைப்போன்ற ஒரு சாதாரண மனிதரென்று சொல்லக்கூடாதென்று தான் சொல்கிறோம். அத்துடன் அம்மனிதத் தோற்றத்தில் வெளியான அவர்களின் எதார்த்தங்களையும் பாருங்களென்று தான் சொல்கிறோம். ஆனால் நீங்கள் குர்ஆன் மனிதரென்று சொன்னதை வைத்துக் கொண்டு உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று சொல்வதுடன், அவர்களது புகழுக்குரிய எதார்த்தமான நிலைகளை எல்லாம் எல்லை கடந்ததென்று சொல்வதைத் தான் நயவஞ்சகத்தனம் என்று எச்சரிக்கிறோம்.

மேலும் அல்லாஹ் அவனது மாமறையில் "பஷர்" என்று சொன்னதால் அதை வைத்துக்கொண்டு நாமும் சொல்லலாமா? பின்னும் பஷர் என்று சொன்னவர்களெல்லாம் யார் தெரியுமா? இதோ அந்தக் குர்ஆனையே பாருங்கள்.

**வசனம் ஒன்று :-**

وقال الملأ الذين كفروا من قومه مانراك إلا بشـــرا مثلنا



ومانراك إتبعك إلاالذين هم أراذلنا بـــادى الرأي ومانرى
لكم علينا من فضل بل نظنكم كاذبين

**"ஹழ்ரத் ஹூத் அலைஹிஸ்ஸலாமவர்களை நிராகரித்த அவரது சமூகத்தினர் (அவரை நோக்கி) நாங்கள் உம்மை எங்களைப் போன்ற ஒரு மனிதராகவே அன்றி (வேறு விதமாகக்) காணவில்லை. இன்னும் அறிவும் தெளிந்த சிந்தனையும் இல்லாத இழிவானவர்களே உம்மைப் பின்தொடர்பவர்களாக பார்க்கிறோம். எங்களைவிட உமக்கு எவ்வகையான மேன்மையும் இருப்பதாக நாங்கள் காணவில்லை. மாறாக உம்மை நாங்கள் பொய்யர்களாகவே பார்க்கிறோம்."** *(சூரா ஹூத், வசனம்-27)*

ஏ! வஹ்ஹாபிகளே!

1. நீங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று சொல்லவில்லையா?

2. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை கண்ணியப்படுத்தும் சுன்னத் வல் ஜமாஅத்தினரை இழிவுபடுத்தவில்லையா?

3. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இச்சமுதாயத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு தூதர் மட்டுமே. எங்களுக்குப் பணிவிடை செய்வதற்காக அனுப்பப்பட்டவர் என்றும், நபியவர்கள் (நவூதுபில்லாஹ்) ஒரு தபால்காரரைப் போன்றவர் என்று மௌதூதி சொல்லவில்லையா? நபியவர்கள் நமது மூத்த சகோதரனைப் போன்றவர் தானென்று இல்யாஸ் சொல்லவில்லையா?

**வசனம் இரண்டு :-**

وقال الملأ من قومه الذين كفروا و كذبوا بلقاء الآخرة
وأترفناهم في الحياة الدنيا ماهذا إلا بشـــر مثلكم يأكل مما
تأكلون منه ويشرب مما تشربون ولئن أطعتم بشرا مثلكم
إنكم إذالخاسرون

**"ஆதுக் கூட்டத்தாரில் காபிர்களாக இருந்த தலைவர்களும் இன்னும் இறுதிநாளைப் பொய்யாக்குபவர்களும் நாம் அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையில் விசாலமான (சுகானுபவங்களை) கொடுத்திருந்தோமே அவர்களும் (தமது சமூகத்தாரிடம்) இவர் உங்களைப் போன்ற ஒரு மனிதரேயன்றி வேறில்லை. நீங்கள் உண்ணுவதையே அவரும் உண்ணுகிறார். நீங்கள் அருந்துவதையே அவரும் அருந்துகிறார். எனவே உங்களைப் போன்ற ஒருவரைப் பின்தொடர்வீர்களாயின் நிச்சயமாக நீங்கள் நஷ்டவாளிகளே."** *(சூரா முஃமினூன், வசனம்-33,34.)*

இவ்வசனத்தில் ஆது சமூகத்தினர் இறுதிநாளைப் பொய்யாக்குபவர்களாக இருந்ததோடு பெரும் செல்வந்தர்களாகவும் இருந்துள்ளனர். அத்துடன் அவர்களுக்கு அனுப்பப்பட்ட நபியைப் பொய்யாக்கியதற்குரிய காரணத்தைச் சொல்லும்போது,

"உங்களைப் போன்ற ஒரு மனிதராகத்தான் இருக்கிறார்" என்றும்,

"நீங்கள் உண்ணுவதையே அவரும் உண்ணுகிறார்" என்றும்,

"நீங்கள் பருகுவதையே அவரும் பருகுகிறார்" என்றும்,

"உங்களைப் போன்ற ஒருவரை நீங்கள் பின்தொடர்வீர்களாயின் நிச்சயமாக நீங்கள் நஷ்டவாளிகளே" என்றும் கூறப்படுவதைக் கவனியுங்கள். அத்துடன்,...

*1. உங்களின் முன்னோடிகளான அப்துல் வஹ்ஹாபும் தற்போதுள்ள அல்பானி, ஹுஸைமைன், பௌஸான் போன்றோரின் நாடுகளும் இன்று பெரும் செல்வம் கொழிக்கும் நாடுகள்தானே. இறுதிநாளைப் பொய்யாக்காவிட்டாலும் எங்களின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நீங்கள் உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று சொல்லவில்லையா?*



*2. எங்களின் இதய வேந்தரான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஒளி மயமானவர்கள் என்று சொன்னபோது நூராக இருப்பவர் எப்படிச் சாப்பிட முடியும்? அது மனிதப் பண்புக்குரிய தன்மையல்லவா என்று நீங்கள் கேட்கவில்லையா?*

*3. நாங்கள் அருந்துவதைப் போலவே இவரும் அருந்துகிறார் ஆதலால் இவர் எங்களைப் போன்றவர் என்று நீங்கள் சொல்லவில்லையா?*

*4. சுன்னத் வல் ஜமாஅத்தினர் தம்மை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அடிமைகளென்று சொன்னதைக் கேட்டு எங்களை நீங்கள் முஷ்ரிக்குகள் என்று இழிவுபடுத்த வில்லையா? நபியை சாதாரண மனிதரென்று சொல்பவர்கள் யாரென்று இப்போது புரிகிறதா?*

**வசனம் மூன்று :-**

كذبت ثمود بالنذر فقالوا أبشرا منا واحدا نتبعه إنا إذالفي ضلال وسعر

**"ஸமூத் கூட்டத்தார் (அவர்களின் நபியான ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாமவர்களின்) எச்சரிக்கைகளை எல்லாம் பொய்யாக்கி நாங்கள் எங்களைப் போன்ற ஒருவருக்கா வழிப்படுவது! அவ்வாறு வழிப்பட்டால் திடனாக நாங்கள் வழிகேட்டிலும் நரகிலும் இருப்போமென்று கூறினர்."** *(சூரா அல் கமர், வசனம்-23,24)*

**ஓ! வஹ்ஹாபிகளே!**

*ஸமூத் கூட்டத்தார் ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாமவர்களை ஒரு சாதாரண மனிதரைப்போன்று பார்த்ததால் தான் அவர்களைப் பொய்யாக்கினர். அவர்களைப் போலவே நீங்களும் உங்களின் நபியை ஏற்றுக்கொண்ட பின்பும் கூட ஒரு சாதாரண மனிதரென்று சொல்கிறீர்களே. ஏனெனில் அவர்கள் காபிர்கள். நீங்கள் முனாபிக்குகள். அதனால் தானோ.*

**வசனம் நான்கு :-**

ومانت إلابشر مثلنا وإن نظنك لمن الكاذبين

**"(ஷுஐப் அலைஹிஸ்ஸலாமவர்களின் கூட்டத்தார்) நீர் எங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரேயன்றி வேறில்லை. இன்னும் திடனாக உம்மைப் பொய்யர்களில் ஒருவராகவே நாங்கள் எண்ணுகிறோம் என்றனர்."** *(சூரா அஷ்ஷுஅரா, வசனம்-186)*

**ஓ! வஹ்ஹாபிகளே!**

ஷுஐப் அலைஹிஸ்ஸலாமவர்களை அவர்களது சமூகத்தார் ஒரு சாதாரண மனிதராகக் கண்டதால் தான் அவர்கள் தமது நபியைப் பொய்யாக்கி காபிர்களாகவும் ஆகிப்போயினர். ஆனால் நீங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை உண்மையாளரென்று சொல்லிக்கொண்டே உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று சொல்கிறீர்களே. அப்படியானால் நீங்கள் முனாபிக்கீன்கள் இல்லையா?

**வசனம் ஐந்து :-**

ثم ارسلنا موسى وأخاه هارون بآياتنا وسلطان مبين الى
فرعون وملإه فاستكبروا وكانوا قوما عالين فقالوا أنؤمن
لبشرين مثلنا وقومهما لنا عابدون

**"பின்னர் மூஸாவை (அலைஹிஸ்ஸலாமவர்களை)யும் அவருடைய தோழர் ஹாரூனை (அலைஹிஸ்ஸலாமவர்களை)யும் நம்முடைய அத்தாட்சிகளுடனும் தெளிவான சான்றுகளுடனும் ஃபிர்அவ்னிடத்திலும் அவனது பிரமுகர்களிடத்திலும் அனுப்பினோம். அவர்கள் ஆணவங்கொண்டு பெருமையடிக்கும் சமூகத்தாராக இருந்தனர். இன்னும் அவர்கள் நாங்கள் எங்களைப் போன்ற இருவரையா ஈமான் கொள்வது? இவ்விருவரின் சமூகத்தாரும் நமக்கல்லவா அடிபணிந்து பணிவிடை செய்கிறார்களென்று கூறினர்."**

*(சூரா முஃமினூன், வசனம்-45,46,47.)*



ஹழ்ரத் ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாமவர்களின் சமூகத்தார் தங்களின் நபியை ஒரு சாதாரண மனிதரென்று பொய்யாக்கியதால் அவர்கள் அழிக்கப்பட்டனர். இவ்வாறே ஹழ்ரத் ஷுஐப், ஹழ்ரத் மூஸா அலைஹிமஸ்ஸலாமவர்களின் சமூகத்தாரும் இதே காரணத்திற்காக அழிக்கப்பட்டனர். ஆனால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஒரு சாதாரண மனிதரென்று சொன்னாலும் அவ்வுத்தமரை தமது நபியாக ஏற்று கலிமா சொல்லி இஸ்லாத்தைத் தழுவியிருப்பதால் இம்முனாபிக்கீன்கள் இதுவரை அழிக்கப்படாமல் விட்டு வைக்கப்பட்டுள்ளனர் எனில் இது எங்களின் ஏந்தலாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பேரருளைக் கொண்டுதான் என்பதை எவராலும் மறுக்க முடியாது. எனவே யார் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஒரு சாதாரண மனிதரென்று சொல்லி அவர்களின் மகத்துவத்தை எதார்த்தமான நிலைகளைப் பொய்யாக்குகிறார்களோ அவர்கள் இப்லீஸின் வழித்தோன்றல்களாகும். அத்துடன் வஹ்ஹாபிஸம் என்னும் கொடிய இயக்கத்தின் படைப்பிரிவைச் சார்ந்தவர்களுமாகும்.

மேலும் நபிமார்கள் மனிதர்களென்பதில் என்ன சந்தேகம்? மனிதர்கள் தானென்றாலும் அவர்களின் அந்தரங்கங்கள் வேறானதாகும். தன்னைப் போன்றே அவர்களின் சமூகத்தார் எண்ணிக்கொண்டதுடன் அவர்களுக்குள் அந்தரங்கங்கள் என்பது எதுவுமில்லை என்றும் கருதியதால் தான் அவர்களைப் பொய்யாக்கினர். இதன் விளைவு! அவர்கள் அல்லாஹ்வின் விரோதிகளாகி அடியோடு அழிக்கப்பட்டும் போயினர். ஆனால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஈமான் கொண்டு அந்தரங்கத்தில் அவர்களின் எதார்த்தங்களை மறுக்கலாயினர். ஏன் இன்றும்கூட மறுத்து வருகின்றனர். இவர்கள் முனாபிக்கீன்களாகும். இதனால் இவர்களுக்கு அழிவுமில்லை. சோதனையுமில்லை. அதேநேரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை கைருல் பஷராகவும் அவர்களின் எதார்த்தங்களை ஈமான் கொண்டுள்ள முஃமின்களுக்குத் தான் இவர்களால் சோதனையும் வேதனையும் நிகழ்ந்து கொண்டுள்ளன.

மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு மறைவான எல்லா விஷயங்களும் தெரியு மென்று காலங்காலமாக சுன்னத் வல் ஜமாஅத்தினர் விளக் கிக் கொண்டிருக்க இடையே ஊடுருவிய வஹ்ஹாபியக் கொள்கைவாதிகள் பல்வேறு பெயர்களில் புதுப்புது அணுகுமுறைகளைக் கொண்ட கூட்டங்களாகத் தோற்ற மெடுத்து நபியவர்களுக்கு மறைவானவைகளெல்லாம் தெரியாது. அப்படித் தெரிந்திருந்தால் அவர்கள் பல யுத்தங் களில் ஏன் தோல்வியடைந்தார்கள் என்றெல்லாம் மக்களை இன்று குழப்பிக் கொண்டுள்ளனர்.

ஆனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு எல்லா மறைவான விஷயங்களும் தெரியும் என்பதுதான் உண்மையான சத்தியமான இஸ்லாமியக் கொள்கையாகும். இருப்பினும் அவையனைத்தும் நபியவர் களுக்கு அவர்களது ரட்சகனால் கற்றுக் கொடுக்கப்பட் டவைகளே அன்றி அல்லாஹ்வுக்கு இருப்பதைப் போல அவர்களுக்கு சுயமாக இருக்கின்றவைகளல்ல. இந்நிலையில் எல்லாவற்றையும் சுயமாக தனக்குள் கொண்டுள்ள சர்வ சக்தனாகிய அந்த அல்லாஹ் தானே தனது நபியையும் அவ ரது கூட்டத்தாரையும் யுத்தம் செய்யுமாறு கட்டளையிட் டான். அப்படியிருந்தும் தோல்வி ஏன் ஏற்பட்டது?

பின்னும் எல்லா மறைவான விஷயங்களும் நபியவர் களுக்கு அறிவித்துக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவை களில் பெரும்பாலானவைகளை மறைத்து வைக்குமாறே நபியவர்கள் உத்திரவிடப்பட்டிருந்தார்கள் என்று கூறு கிறார் வேத விரிவுரையாளரான அல்லாமா இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள். மேலும் அந்த மறைவான விஷயங்களில் எவை எவையெல்லாம் நிகழுமோ அவை களில் இன்று ஒன்று வெளியாகுமானால் நிலநடுக்கம், மழையின்மை, பஞ்சம் போன்றவைகளை எதிர்பாருங் களென்று சொன்னார்கள். அது என்ன தெரியுமா?

"பிற்காலத்தில் வருவோர் தங்களுக்கு முந்தைய காலத் தைச் சேர்ந்த நல்லடியார்களான முன்னோர்களை தரக் குறை வாக இழிவுபடுத்திப் பேசுவர் என்னும் தகவலாகும்." இது திர்மிதியில் இடம் பெற்றுள்ள ஹதீதின் ஒரு பகுதியாகும்.



இதில் சுன்னத் வல் ஜமாஅத் எனப் பெயரிடப்படாத எல்லா இயக்கங்களும் அமைப்புக்களும் ஜமாஅத்துக்களும் தமது முன்னோர்களான நபித்தோழர்களையும், இமாம் களையும், மஷாயிகீன்களையும் தரக்குறைவாக இழிவுபடுத் திப் பேசுவதை பெருமையாக எண்ணிக் கொண்டுள்ளன. அத்துடன் இமாம்களும் மஷாயிகீன்களும் குர்ஆன் ஹதீ துக்கு தவறான விளக்கங்களைத் தருவதாகவும் அவர்கள் மீது இட்டுக்கட்டியும் பேசுகின்றன.

ஆம். நல்லோர்கள் இழிவுபடுத்தப்படுவார்களாயின் பூகம்பம் நிகழும் என்பதை மறைவின் மாணிக்கமாகிய மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் எச்சரிக்கை செய்யப்பட்ட வாக்கு உண்மையாகி விட்டதை அண்மைக்கால நிகழ்வுகளைக் கொண்டு தெரிந்துகொள்ள முடிகிறது. இன்னும் மூதாதையர் எப்போது இழிவுபடுத்தப் படுவார்களோ அப்போதே மழையில்லாப் பஞ்சத்தை எதிர் பாருங்களென்ற ஏந்தல் நபியவர்களின் எச்சரிக்கையும் பலித்து விட்டதை இன்று நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

இன்னும் நமது நாட்டில் வரலாறு காணாத பசியும் பட்டினியும் பஞ்சமும் இன்று தலைவிரித்து ஆடுகிறதென் றால் அதற்கிந்த வஹ்ஹாபிச ஊடுருவலே முக்கியக் காரணம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்த நாசகார சக்திகளால் இன்று நல்லடியார்களும் அப்பாவிகளும் மிருக வர்க்கங்களும் இதன் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பின்னும் இன்று இமாம்களையும், மஷாயிகீன்களை யும் மரியாதைக் குறைவாக பேசுவதற்குரிய காரணமென்ன என்று கேட்கப்பட்டால் முன்னோர்களென்று சொல்லப் படும் அப்பெரியார்கள் குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் மாற்ற மான புதுப்புது கொள்கைகளை கொண்டு வந்ததாகவும் குர்ஆன் ஹதீதுக்குரிய வெளிப்படையான கருத்தை அவர் கள் சொல்லவில்லை என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எந்தவொரு சமூகமானாலும் அது தமது முன்னோர் களைப் பின்தொடர்வதுடன் அவர்களது கருத்துக்களுக்கு முன்னுரிமையும் அளிக்க வேண்டும். அப்போது தான் அச்சமூகம் சீர்பெற முடியும். அவ்வாறில்லையேல் சீரழிவு தான் என்பதை உங்களால் மறுக்கவோ தடுக்கவோ முடியாது.

அத்துடன் அனைத்து சமூக மக்களுக்கும் வழிகாட்டிகளாக அவர்களது முன்னோர்கள் இருப்பது மிகவும் அவசியமாகும். அந்த மக்களும் அவர்களைப் பின்தொடர வேண்டும். ஆனால் அதற்கு மாறாக குர்ஆனும் ஹதீதும் தான் எங்களுக்கு வழிகாட்டிகள், முன்னோடிகள். அவ்விரண்டும் எதைச் சொல்கிறதோ அதைத்தான் நாங்கள் செய்கிறோம். ஆகையால் எங்களுக்கு முன்னோர்களின் கருத்து முக்கியமல்ல என்பதாகச் சிலர் கூறுகின்றனர்.

சரி. அப்படியே வைத்துக் கொள்வோம். நமது முன்னோர்கள் குர்ஆன் ஹதீதில் இல்லாத கருத்துக்களைச் சொல்வதாகக் கூறுகிறார்களே, இவர்களுக்கு அந்த குர்ஆனையும் ஹதீதையும் தொகுத்துத் தந்தது யார்? அந்த முன்னோர்க்ள் தான் அதைச் செய்தார்களெனில் அந்த குர்ஆனிலும் ஹதீதிலும் தமக்கு விருப்பமான கருத்துக்களை எல்லாம் அப்போதே அவைகளில் சேர்த்திருக்கலாமே. அவர்கள் அதை ஏன் செய்யவில்லை?

இன்னும் எனக்குப்பின் எனது தோழர்கள் தான் உங்களின் வழிகாட்டிகள். அவர்கள் இச்சமுதாயத்தில் நட்சத்திரங்களைப் போன்றவர்கள் என்பதாக பெருமையோடு பெரிதுபடுத்தி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் பேசப்பட்ட அந்த நபிமணித் தோழர்கள் தான் இச்சமுதாயத்தை நரகத்திற்கு இட்டுச் செல்லும் பித்அத்துக்களுக்கு அடித்தளமிட்டதாக அசைபோடும் இச்சமுதாயத்திலுள்ள கொடியதோர் கூட்டமாகிய தௌஹீத் ஜமாஅத்தினரே! உங்களது பிரச்சாரத்தின் படி குர்ஆன் நபியவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டதல்ல. மாறாக அதை ஒன்று திரட்டியவர்கள் அவர்களின் தோழர் பெருமக்களே. அப்படியானால் அத்தோழர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட அந்த குர்ஆனில் குளறுபடிகள் இல்லை என்பதற்கு நீங்கள் என்ன உத்திரவாதம் வைத்திருக்கிறீர்கள்? இந்நிலையில் நரகத்திற்கு இட்டுச் செல்லும் பித்அத்தைத் தோற்றுவித்த அத்தோழர்களால் ஒன்று திரட்டப்பட்ட குர்ஆனை நாங்கள் ஆதாரமாகக் காட்டலாமே அன்றி நீங்கள் அதை ஆதாரமாகக் காட்டக்கூடாது. உங்களுக்கு அந்த யோக்கியதையும் அறவே கிடையாது.

இவர்கள் எங்களின் பெரியார்களால் தரப்பட்ட



பிளேட்டை கையில் வைத்துக்கொண்டு அவர்கள் போட்ட பிச்சையில் தின்று கொழுத்து இன்று அப்பெரியார்களே பரிதவிக்கும் வண்ணம் அவர்களை எள்ளி நகையாடுகிறார்களே இவர்கள்தான் நன்றியுள்ளவர்கள்? இவர்களால் இந்தச் சமுதாயத்திற்கு என்ன லாபம்? நாமும் நமது முன்னோர்களும் செய்தும் சொல்லியும் வந்தவைகளெல்லாம் வழிகேடானவை என்றும் குர்ஆன் ஹதீதிலில்லாத புதுப்புது வியாக்யானங்களை எல்லாம் இவர்களது வாயால் சொல்லக் கேட்கும் போது முஸ்லிம் ஷரீப் என்னும் நூலில் விபரிக்கப்படும் ஒரு நபிமொழி தான் நம் கண்முன்னே நிழலாடுகிறது.

وحدثني محمد بن عبدالله بن نميروزهير بن حرب قالا: حدثنا عبدالله بن يزيد قال: حدثني سعيد بن ابى ايوب قال: حدثني ابو هانئ عن ابى عثمان مسلم بن يسار عن ابى هريرة رضى الله عنه عن رسول الله صلى الله عليه وآله وسلم أنه قال: سيكون في آخر أمتي أناس يحدثونكم ما لم تسمعوا أنتم ولا آبائكم فإياكم وإياهم

**“பிற்காலத்தில் எனது உம்மத்தினர் (என்று சொல்லிக் கொள்ளும்) சிலர் உங்களிடம் வருவார்கள். அவர்கள் நீங்களோ உங்களது மூதாதையரோ (தந்தையும் தந்தையின் தந்தையும்) கேட்டிராத (புதுப்புது) ஹதீதுகளை (விளக்கங்களைச்) சொல்வார்கள். அவர்களின் வலையிலோ குழப்பத்திலோ நீங்கள் சிக்கிக்கொள்ள வேண்டாமென்று எச்சரிக்கிறேன் என்றார்கள் மறையின் மணிமகுடம் மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்.”** *(அ-ர் ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம் ஷரீப், பாகம்-1, பக்கம்-117, முகத்தமா முஸ்லிம்)*

وحدثني حرملة بن يحى بن عبدالله بن حرملة بن عمران التجيى قال حدثنا ابن وهب قال: حدثني ابو شريح أنه سمع

شراحيل بن يزيد يقول: أخبرني مسلم بن يسار أنه سمع أبا هريرة رضى الله عنه يقول: قال رسـول الله صلى الله عليه وآله وسـلم: يكون في آخرالزمان دجالون كذابـون يأتونكم من الأحاديث بما لم تسـمعوا أنتم ولاآبـائكم فإياكم وإياهم لايظلونكم ولايفتنونكم

**"இறுதிக் காலத்தில் பல பொய் தஜ்ஜால்கள் வருவார்கள். அவர்கள் நீங்களும் உங்களின் மூதாதையரும் கேட்டிராத ஹதீதுகளை (பேச்சுக்களை) பேசுவார்கள். உங்களை நான் அவர்களது குழப்பத்தின் வழிகேட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள எச்சரிக்கிறேன் என்று சொல்கிறார்கள் சத்திய வேந்தர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்."** *(அ-ர் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு, நூல் : முகத்தமா முஸ்லிம்.)*

எனவே யார் சுன்னத் வல் ஜமாஅத்தினர் செய்வதற்கும் சொல்வதற்கும் ஆதாரமில்லை அவையனைத்தும் வழிகேடானவை எனக்கூறி அதை நிரூபிக்க குர்ஆன் ஹதீதைக் காட்டுகிறார்களோ அவர்களை நம்பாதீர்கள். ஆம் சுன்னத் வல் ஜமாஅத்தினர் பேசும் செய்யும் அனைத்தையும் பொய்யாக்க ஹதீதுகளைக் கொண்டு வருவார்களென்றால் அவர்கள் புதிதாக எதையும் கொண்டுவரப் போவதில்லை. மாறாக அவர்கள் கொண்டு வரும் ஆதாரங்களனைத்தும் நமது முன்னோர்களால் சொல்லப்படாத புதுப்புது விஷயங்களாகத்தான் இருக்கும். அதைச் சொல்லித்தான் இவர்கள் பாமர மக்களை திசைதிருப்புகிறார்கள்.

இனி குர்ஆன் ஹதீத் தான் வழிகாட்டி என்பதில் யாருக்கும் எவ்வித ஐயமுமில்லை என்ற போதிலும் அந்த குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் நாமாக எந்தவொரு விளக்கமும் சொல்லக்கூடாது. நமது முன்னோர்கள் தந்த விளக்கங்களின் படிதான் நாம் செயல்பட வேண்டும். இதைத்தான் மேற்கண்ட அவ்விரு ஹதீதுகளும் நமக்கு சுட்டிக் காட்டுகின்றன.

அதற்கு மாறாக முன்னோர்களான இமாம்கள், மஷா



யிகீன்கள், வலிமார்கள் போன்றோர் தந்த விளக்கங்களை எல்லாம் தமது முதுகுக்குப் பின்னால் தூக்கியெறிந்து விட்டு குர்ஆன் ஹதீதை மட்டுமே நாம் பின்பற்ற வேண்டுமென்று தான் கட்டளையிடப்பட்டுள்ளோமென்று சொல்லும் இந்தத் தௌஹீத்வாதிகள் தஜ்ஜால்களாகும். நாமும் நமது முன்னோர்களும் கேட்டிராத விஷயங்களை எல்லாம் சொல்பவர்கள் இவர்கள்தான். ஆதலால் குர்ஆன் ஹதீதை மட்டும் ஆதாரமாகக் காட்டுவோரை நம்பாதீர்கள். அவர்கள் காட்டும் குர்ஆனையும் ஹதீதையும் நமது முன்னோர்கள் எதற்கு ஆதாரமாக்கினார்கள் என்பதைக் கவனியுங்கள். அன்றி குர்ஆன் ஹதீதிலிருந்து தானே ஆதாரம் காட்டுகிறார்களென்று உங்களுக்குள் சந்தேகத்திற்குரிய ஒருசிறு பொறி தட்டுமானாலும் விரைவில் நீங்களும் அவர்களோடு கைகோர்க்கப் போகிறீர்கள் என்பதுதான் அதற்கு அர்த்தமாகும். ஆகையால் விழிப்போடு ஜாக்கிரதையாக இருந்து உங்களின் ஈமானைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

அன்பானவர்களே! சுன்னத் வல் ஜமாஅத்தினர், அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்ட சிருஷ்டி நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி தானென்பதைப் பொய்யாக்க குர்ஆனும் ஹதீதும் உங்களிடம் எடுத்துக் காட்டப்படுமானால் தலையாட்டி பொம்மையைப் போல இது தவறு அவர்கள் சொல்வது தான் சரியென்று நீங்களும் அந்தச் சாக்கடையில் விழுந்து விடாது அவர்களால் எடுத்துக் காட்டப்படும் குர்ஆன் ஹதீதுக்குரிய அவ்வாதாரத்திற்கு நமது முன்னோர்கள் என்ன விளக்கம் தந்துள்ளார்கள் என்பதை எடுத்து அதனோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அல்லாஹ்வால் படைக்கப்பட்ட அந்த ஜோதிதான் நபியாக, ரஸூலாக, மனிதத் தோற்றமெடுத்து காட்சியளித்தது என்னும் கொள்கையைப் பொய்யாக்க குர்ஆன் ஹதீதை காட்டப்படுமானால் அவைகளைக் கண்மூடித்தனமாக நம்பாது முன்னோர்களது விளக்கங்களைக் கவனிக்கத் தவறாதீர்கள்.

இன்னும் ரஸூல்மார்கள், நபிமார்கள், வலிமார்கள் போன்றோரிடம் நேரடியாக நமது நாட்ட தேட்டங்களை நிறைவேற்றித் தருமாறு பிரார்த்திக்கலாம் என்னும் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைக்கு மாறான கருத்து குர்ஆன்

ஹதீதைக்கொண்டு முன்னிருத்தப்பட்டால் அவற்றுக்கு முன்னோர்கள் தந்துள்ள விளக்கங்களை எடுத்துப் பார்க்கத் தவறாதீர்கள்.

நபிமார்களும் வலிமார்களும் தமது மண்ணறைகளில் உயிரோடு இருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் நமது அழைப் பையும் பிரார்த்தனையையும் செவிமடுக்கிறார்கள் என்னும் நம்பிக்கைக்கு எதிரிகளால் காட்டப்படும் குர்ஆன் ஹதீ தைக் கண்டு சட்டெனச் சறுகிவிடாமல் அதற்கான விளக் கங்களைப் பாருங்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களின் புனிதமிகு ரௌழா ஷரீபை தரிசிப்பதற்காக பயணம் செய்யலாம். அவர்கள் மீது சொல்லப்படுகின்ற ஸலவாத் துக்களை அவர்கள் செவியேற்கின்றனர் என்னும் நம்பிக் கைக்கு மாற்றுக் கருத்து குர்ஆன் ஹதீதிலிருந்து காட்டப் படுமானால் அவைகளுக்கான விளக்கங்களைப் பார்வை யிடாது அதைச் சொல்பவர் மீது நல்லெண்ணம் கொள்ளா தீர்கள்.

இதுபோன்றே தொப்பி அணிவதை சுன்னத்தென்று தான் நாம் தெரிந்திருக்கிறோம். மௌலிது ஓதலாம் என்ப தால் ஓதி வருகிறோம். பாங்குக்கு முன் ஸலவாத்துச் சொல்ல லாமென்பதால் சொல்லி வருகிறோம். வலிமார்களின் தர் காக்களுக்கு ஆண் பெண் ஆகிய இரு சாராரும் செல்லலா மென்று இருப்பதால் சென்று வருகிறோம். இவ்வாறே தல்கீன் ஓதுதல், கூட்டாக துஆ செய்தல், பாங்கில் நபியவர் களின் பெயரைக் கேட்டு பெருவிரலை முத்தமிடல், சப்த மாக திக்ரு செய்தல், ஆடி அசைந்து திக்ரு செய்தல் போன்ற இன்னோரன்ன காரியங்களையும் ஆகுமானவை என்பதால் செய்து வருகிறோம். அதற்கு மாறாக இவைகளெல்லாம் பித் அத்தென்று எவரேனும் சொல்வாராயின் அவர் பொய்ய ரும் குழப்பவாதியுமாகும்.

மேலும் சுன்னத் வல் ஜமாஅத்தினரது கொள்கை களுக்கும் நடைமுறைகளுக்கும் ஆதாரமில்லையென்று சொல்பவர்களும் குர்ஆன் ஹதீதைத்தானே ஆதாரமாக எடுத்துக் காட்டுகின்றனர்! இந்நிலையில் பாமரர்களாகிய



நாங்கள் யாருடைய கருத்தை ஏற்றுக் கொள்வது என்னும் கேள்வி நாலா திசைகளிலிருந்தும் தொடுக்கப்படுவதை நாம் பார்த்துக் கொண்டுதானிருக்கிறோம்.

அவர்களுக்கு ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். அதாவது, குர்ஆன் ஹதீதை முன் வைத்து இவர்களால் எடுத்துக் காட்டப்படும் ஆதாரங்கள் அனைத்தும் நமது முன்னோர்களால் சொல்லப்படாத புதியதோர் விளக்கங்களாகும். அத்துடன் குர்ஆன் ஹதீ துக்கு விரிவுரைகளைத் தந்த நமது முன்னோர்களின் விளக் கங்களுக்கு இவை முற்றிலும் மாற்றமானவைகளாக இருக் கின்றன. அதனால்தான் நமது முன்னோர்கள் குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் மாற்றமான விளக்கங்களைத் தந்துள்ளதாக இவர்கள் பொது மேடைகளிலும் பேசி வருகின்றனர். அப்படியானால் இவர்கள் இந்த குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் சுயமாகக் கருத்துக் கூறுகின்றனர் என்பதுதானே இதற்குப் பொருள்! இல்லையென்றால் இவர்கள் இப்னு தைமிய்யா வையும், அப்துல் வஹ்ஹாப் நஜ்தியையும், இல்யாஸையும் மௌதூதியையும் பின்பற்றுகிறார்கள் என்று சொல்லலாமா?

நாமும் நமது நாட்டு மக்களும் இவர்களும் இவர்களது கொள்கையைக் கொண்டவர்களும் நமது நாட்டுக்குள் ஊடுருவுவதற்கு முன்னாலிருந்தே மேற்குறிப்பிடப்பட்ட அனைத்தையும் செய்து வருகிறோம். இவர்களது கருத்துக் கள் நம்மை வந்து சேர்ந்த பின்புதான் இவர்களிடமிருந்து நாம் இஸ்லாத்தைக் கற்றுக் கொண்டவர்களோ புரிந்து கொண்டவர்களோ அல்ல. இஸ்லாமிய விளக்கம் இவர்கள் நமக்குச் சொல்லித் தந்ததுமல்ல. மாறாக இவர்களது ஊடுரு வலுக்குப் பின்புதான் இந்த நாட்டில் இஸ்லாமிய சமுதா யம் பிளவுபட்டுப் போனது. அத்துடன் நாடே குட்டிச்சுவ ராகிப் போயிற்று.

எனவே இவர்களில் யார் எதைச் சொன்னாலும் அதற்கு குர்ஆன் ஹதீதை மட்டுமல்ல. அதற்கும் மேலாக இன்னொரு ஆதாரத்தைக் காட்டினாலும் அவற்றை நமது முன்னோர்களது கருத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அத்து டன் அது முன்னோர்களின் ஏகோபித்த முடிவா என்பதை யும் பாருங்கள்.

இன்னும் குர்ஆன் ஹதீதுக்குரிய பொருள் இதுதான். இந்த அரபிச் சொல்லுக்கு இதுதான் அர்த்தமென்று மடக்கி மடக்கி பாமரர்களிடம் சொல்லும்போது, பாமரர்கள் மட்டுமல்ல. உலமாக்களும் மிக மிக உன்னிப்பாக இருந்து உண்மை என்னவென்பதைக் காட்டித் தாருங்கள். அத்துடன் நமது முன்னோர்களால் சொல்லப்படாத விளக்கங்களையும் வியாக்யானங்களையும் சொல்லும் இவர்கள் பேச்சாற்றலில் மிகுந்த திறமையுள்ளவர்களாக இருப்பதையும் மறந்து விடாதீர்கள்.

இன்னும் இவர்கள் குர்ஆனையும் ஹதீதையும் தானே ஆதாரமாகக் காட்டுகிறார்களென ஆச்சரியப்பட வேண்டாம். இவர்கள் காட்டுகின்ற குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் தமிழில் இதுதானே அர்த்தமென்றும் குழப்பமடைய வேண்டாம். ஏனெனில் குர்ஆனும் ஹதீதும் பாலர் பள்ளியில் கற்பிக்கப்படுகின்ற புத்தகங்களோ நாவல்களோ அல்ல. பாலர் பள்ளியில் பயிலும் ஒரு மாணவனிடம் சிங்கம் என்றால் என்ன? என்று கேட்டால் அதற்கவன்; அது ஒரு மிருகத்தின் பெயரென்று தான் சொல்லுவான். இல்லை அதற்கு வேறொரு பொருளும் உண்டென்று சொல்வோமாயின் அவர்களிடம் நாம் பொய்யர்களாக நேரிடும். இதேபோல குர்ஆன் ஹதீதிலுள்ள ஒரு வஷனத்திற்கு இதுதான் பொருளென்று சொல்லப்பட்டால் அதற்கு வேறு பொருளுண்டா என்பதை ஆராயுங்கள். இன்னும் அவ்வசனத்திற்கு முன்னும் பின்னும் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்பதையும் கவனியுங்கள். தொலைநோக்கு சிந்தனையை இழந்த நம்மால் இப்படியெல்லாம் சிந்திக்க முடியாதென்பதற்காகத் தான் நமது முன்னோர்கள் அதற்கு என்ன விளக்கம் தந்துள்ளார்கள் என்பதைப் பாருங்களென்று திரும்பத் திரும்ப குரல் கொடுக்கிறோம்.

மேலும் நமது முன்னோர்களான முபஸ்ஸிரீன்களும், முஹத்திஸீன்களும், முஃபக்கிஹீன்களும், ஸூஃபிய்யாக்களும் தந்த விளக்கங்களெல்லாம் பொய்யானவை, குர்ஆன் ஹதீதுக்கு மாற்றமானவை என இவ்வுலகில் தோன்றிய இப்னு தைமிய்யா என்பவருக்கு முன்னால் யாருமே சொன்னதில்லை. இன்னும் இவரது விளக்கங்கள் நவீனமானதாக இருந்ததால் அதற்காக இவர் பலமுறை சிறையில் அடைக்



கப்பட்டார். வழிகேடர், வழிகெடுப்பவர் என்றும் பட்டம் சூட்டப்பட்டார். இவரோடு அஸ்தமித்துப் போன இவருடைய கருத்துக்கள் இவருக்குப் பின்வந்த 300 ஆண்டுகாலம் வாழ்ந்தவர்களில் எவராலும் சொல்லப்படவுமில்லை. இவர் ஹிஜ்ரி 661ல் பிறந்து 728ல் இறந்து போனார்.

இவருக்குப் பின் இவருடைய கருத்துக்களை ஆதரித்ததோடு முஸ்லிம் என்றால் இவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் அவர் முஷ்ரிக்காகும் என இவருக்குப்பின் பிரகடனப்படுத்திய முதல் ஆசாமி முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாப் என்பவராகும். இவர் ஹிஜ்ரி 1111ல் பிறந்து 1206ல் மடிந்து போனார். இதில் சுன்னத்வல் ஜமாஅத்தைத் தவிரவுள்ள ஏனைய எல்லாக் கூட்டங்களுமே கொள்கை அடிப்படையில் இவரைச் சார்ந்தோர் என்பதால் இவர்கள் வஹ்ஹாபிகள் என்றழைக்கப்படுகின்றனர்.

அரபு நாட்டில் தலைதூக்கிய இப்பிரச்னை இந்திய நாட்டில் தோன்றிய தேவ்பந்திகள், கைரெ முகல்லிதுகள் என்னும் இரு கூட்டத்தாருக்கு முன் இந்திய நாட்டில் இக்கொள்கை பேசப்படவேயில்லை. அல்லது இஸ்லாமியக் கொள்கைக்குரிய விளக்கமாகவும் இது இருக்கவில்லை. அதன்பின் தப்லீக் ஜமாஅத், தௌஹீத் ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாமி, இக்வானுல் முஸ்லிமீன், அன்ஸாருல் முஸ்லிமீன், எஸ். ஐ. ஓ. அய்.எஸ்எம். போன்ற பல்வேறு பெயர்களில் பிறப்பெடுத்த இக்கூட்டங்கள் அனைத்தும் மேற்கண்ட இரு கூட்டத்தின் மறு பெயர்களாகும். இக்கூட்டங்களைச் சார்ந்தோர் நேரத்திற்குத் தக்கவாறு ஏதாவதொன்றைச் சொல்லி பாமரர்களை ஏமாற்றினாலும் இவர்கள் தமது சொந்த ஆதாயத்திற்காக மார்க்கத்தை விலை பேசும் வியாபாரிகள் என்பது இவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

அதேநேரம் நம்மால் எடுத்துக் காட்டப்படும் சுன்னத்வல் ஜமாஅத்தின் கொள்கைகளும் அதன் கோட்பாடுகளும் நமது சொந்த விளக்கங்களோ கருத்துக்களோ அல்ல. மாறாக இவையனைத்தும் இப்னு தைமிய்யா மற்றும் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி போன்றோருக்கு முந்தியவர்களின் கருத்துக்களாகும். வரலாற்றின் ஒரு பகுதியை எடுத்துக் காட்ட வேண்டுமென்பதற்காக அதனை சுருக்கமாக உங்க

ளின் பார்வைக்கு தந்தோம். இனி நாம் எடுத்துக் கொண்டுள்ள தலைப்புக்குரிய விஷயங்களைப் பார்ப்போம்.

இறைவனால் முதன் முதல் படைக்கப்பட்ட ஜோதியான நமது திங்களெங்கோமான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சூரிய, சந்திர வெளிச்சத்தில் நிழல் விழுந்ததில்லை. இன்னும் நபியவர்களுக்கு நிழலே இருக்கவில்லை என்பதுதான் நமது முன்னோர்களின் நம்பிக்கையாகும். நாமும் நமது பெற்றோர்களும் இதுவரை நபியவர்களுக்கு நிழலில்லை என்றுதான் சொல்லியும் வருகிறோம். ஆனால் இன்று இரவு பகலாக தம்மை இஸ்லாமிய சேவையில் ஈடுபடுத்திக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் இயக்கங்கள் நபியவர்களுக்கு நிழல் இருந்தது என்பதற்குரிய ஸஹீஹான ஹதீதுகள் உள்ளனவென்று பிரச்சாரம் செய்து வருகின்றன. நாமும் நமது மூதாதையரும் கேள்விப்படாத புதியதோர் விஷயம் சொல்லப்பட்டால் அதற்குரிய தீர்ப்பென்ன என்பதை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஹதீதைக் கொண்டு முன்னாலேயே நாம் பார்த்து புரிந்துகொண்ட ஒன்றென்ற போதிலும் நிழலிருப்பதாக வாதிப்போர், நிழலில்லையென வாதிப்போர் ஆகிய இருவரது கருத்துக்களையும் இங்கே உங்களின் பார்வைக்கு தருகிறோம். தெளிந்த சிந்தனையோடு படித்துப் பார்த்து முடிவெடுங்கள்.



## ழில்லும் அதன் பொருளும்

“ழில்லுன்” என்னும் அரபிப் பதத்திற்கு தமிழில் நிழல் எனப் பொதுவாக அர்த்தம் சொல்லப்பட்டாலும் மதிய நேரம் வரையுள்ள வெயிலுக்கே “ழில்லுன்” எனச் சொல்லப்படும். இனி மதிய நேரத்திலிருந்து மஃரிப்வரை காணப்படும் நிழலுக்கு “ழில்லுன்” என்று சொல்லாமல் “ஃபைவுன்” எனச் சொல்லப்படும்.

**“ழில்லுன்” என்பதற்கு நிழல் என்று அர்த்தம் சொல்லப்படுவதைப் போல இப்பதத்திற்கு இன்னும் பல அர்த்தங்கள் உள்ளன. அவை, மேகம், தோப்பு, அருள், கனமான ஆடை, இரவின் ஓர்பகுதி, வாலிபப் பருவம், பாதுகாப்பு, நண்பகல், நிழல் தருதல், நிழலுடைய தாகுதல் என்பன போன்றவைகளாகும்.** *(நூல்: அல்காமூஸுல் அன்வார், பக்கம்-118.)*

மேலும் “ழில்லுன்” என்பதற்கு மனிதன், உருவம் என்றும் அர்த்தமுண்டு. அதை வழக்கத்தில் கொண்டுதான் நாம் நமது பேச்சு வழக்கத்தில் நமக்கு மிகவும் நெருக்கமான ஒருவரைப் பார்த்து “என்ன உங்களுடைய நிழலைக்கூட காணோம்” எனக் கேட்கிறோம். அதாவது உங்களைப் பார்க்கவே முடியவில்லையே என்பதுதான் இதற்குரிய பொருளாகும். ஆதலால் இவற்றையெல்லாம் நீங்கள் நன்றாக மனதில் பதியவைத்துக் கொள்ளுங்கள். அல்லது எதிர் தரப்பாரின் கருத்துக்கள் உங்கள்முன் வைக்கப்படும் போது மீண்டுமொரு முறை இதைப் படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

## சுன்னத் வல் ஜமாஅத்தினரின் கருத்து

أخرج الحكيم الترمذى عن ذكوان أن رسول الله صلى الله عليه وآله وسلم لم يكن يرى له ظل في شمس ولا قمر

**"நிச்சயமாக நூரே முஜஸ்ஸமாகிய ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சூரிய சந்திரனின் வெளிச்சத்தில் நிழல் காணப்படவில்லை."** *(நூல்: கஸாயிஸுல் குப்ரா, பாகம்-1, பக்கம்-68, இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ்)*

أنه صلى الله عليه وآله وسلم صار نورا أنه كان إذا مشى فى الشمس اوالقمر لم يظهر له ظل

**"திடனாக தாஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஜோதியானவர்களாகும். அதனாலேயே அவர்களுக்கு சூரிய சந்திரனின் வெளிச்சத்தில் நிழல் வெளியாகவில்லை."** *(நூல்: அல் மன்ஹுல் மக்கிய்யா ஃபீ ஷரஹில் ஹம்ஸிய்யா, பாகம்-1, பக்கம்-129, இமாம் இப்னு ஹஜர் ஹைத்தமி ரஹிமஹுல்லாஹ்)*

وقال عثمان رضى الله عنه إن الله ماأوقع ظلك على الأرض

**"நபியே நாயகமே! பூமியில் உங்களின் நிழலை அல்லாஹ் விழவைக்கவில்லை என்கிறார்கள் ஹழ்ரத் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்"** *(நூல்: தப்ஸீர் நஸஃபி, ஸூரத்துன் நூர், பாகம்-2, பக்கம்-1123, இமாம் நஸஃபி ரஹிமஹுல்லாஹ்)*

أن النبي صلى الله عليه وآله وسلم كان إذا مشى لم يكن له ظل

**"நிச்சயமாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நடந்து செல்வார்களாயின் அவர்களுக்கு நிழல் விழாது."** *(நூல்: முஃப்ரதாத்துல் குர்ஆன், பக்கம்-653, இமாம் ராகிப் இஸ்பஹானி ரஹிமஹ்ுல்லாஹ்)*



عن ابن عباس رضى الله عنهما قال لم يقع لرسـول الله صلى الله عليه وآله وسلم ظل و لم يقع مع شمس قـط إلا غلب ضوئه ضوء الشمس و لم يقع مع سراج قط إلاغلب ضوئه على ضوء السراج

**"ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்வர்களுக்கு நிழல் விழவில்லை. நபியவர்கள் சூரிய சந்திர வெளிச்சத்தில் காணப்படுவார்களாயின் அவைகளின் வெளிச்சத்தை விட அவர்களின் ஒளியே மிகைத்திருக்கும் எனக் கூறுகின்றனர் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்."** *(நூல்: அல்வபா பி அஹ்வாலில் முஸ்தபா, பக்கம்-412, அல்லாமா அப்துர் ரஹ்மான் பின் ஜௌஸி)*

وماذكر من أنه كان لاظل لشخصه في شمس ولاقمر لأنه كان نورا

**"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சூரிய சந்திரனின் வெளிச்சத்தில் நிழலிருக்கவில்லை. திடனாக நபியவர்கள் ஜோதியானவர்கள்."** *(நூல்: அஷ்ஷிபா, பாகம்-1, பக்கம்-242, அல்லாமா காழி இயாழ் ரஹிமஹுல்லாஹ்)*

ومن أسمائه صلى الله عليه وآله وسلم النور وليس للنور ظل

**"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குரிய திருநாமங்களில் (நூர்) என்பதும் ஒன்றாகும். ஆதலால் நூருக்கு நிழலில்லை."** *(நூல்: மதாரிஜுன் நுபுவ்வத், அல்லாமா அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி)*

و لم يكن يقع ظله صلى الله عليه وآله وسلم على الأرض

**"ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நிழல் பூமியில் விழவில்லை."**

*(நூல்: தப்ஸீர் பத்ஹுல் அஸீஸ், சிராஜுல் ஹிந்த் அல்லாமா அப்துல் அஸீஸ் முஹத்திஸ் தெஹ்லவி)*

இதுவரை அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஜோதியானவர்கள் என்பதால் அவர்களுக்கு நிழல் இல்லை என்பதுதான் நமது முன்னோர்களின் அகீதா - நம்பிக்கை என்பதற்கு கடந்த ஹிஜ்ரி 225 முதல் 1200 வரையுள்ள ஒருசில அறிஞர் பெருமக்களின் கருத்துக்களை உங்களின் பார்வைக்கு தந்தோம்.

பின்னும் திருக்குர்ஆனின் விரிவுரையாளர்களில் ஒருவரான அல்லாமா ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நபியவர்களுக்கு நிழலில்லை என்று கூறுகிறார்கள். இல்லையில்லை இருக்கின்றதென்று வாதிக்கிறது வஹ்ஹாபிஸம். புகாரி ஷரீபின் விரிவுரையாளர் அல்லாமா இமாம் கஸ்த்தலானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நிழலில்லை என்கிறார்கள். ஆனால் நிழலுண்டு என்பதற்கு ஸஹீஹான ஹதீத் இருப்பதாக வாதிக்கிறது வஹ்ஹாபிஸம். முஸ்லிம் ஷரீபின் விரிவுரையாளர் அல்லாமா காழி இயாழ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நிழலில்லை என்று அடித்துச் சொல்கிறார். இருப்பதாகச் சொல்லுகிறது வஹ்ஹாபிஸம். உர்தூ மொழியில் புகாரி ஷரீபுக்கு விரிவிரை தந்த மௌலானா ஷரீபுல் ஹக் என்பார் நிழலில்லை என்கிறார். இருக்கிறதென்று விதண்டாவாதம் பேசுகிறது வஹ்ஹாபிஸம். உர்தூ மொழியில் முஸ்லிம் ஷரீபுக்கு விரிவுரை வழங்கிய மௌலானா குலாம் ரஸூல் ஸயீதி என்பவர் நிழலில்லை என்கிறார். இருந்ததாகச் சொல்கிறது வஹ்ஹாபிஸம். வரலாற்றாசிரியர் அல்லாமா புர்ஹானுத்தீன் ஹலபீ ரஹிமஹுல்லாஹ் என்பவர் நிழலில்லை என்கிறார். இருப்பதாகப் பேசுகிறது வஹ்ஹாபிஸம்.

இதன்றி இமாம் பைஹகீ, இமாம் திர்மிதி, இமாம் ஸுர்கானி, இமாம் இப்னு அஸாகிர், இமாம் குஃப்பாஜி, இமாம் நூருத்தீன் ஹைத்தமீ, இமாம் யூஸுபுன் நபஹானி ரஹிமஹுமுல்லாஹ் போன்ற பெரும் பெரும் மேதைகளெல்லாம் நபியவர்களுக்கு நிழலில்லை என்றே கூறுகின்றனர்.

ஆனால் நிழல் இருந்தது என்பதற்கு ஸஹீஹான ஹதீதுகள் இருப்பதாகக்கூறி அதை நிரூபிக்க நூலொன்றையும் தொகுத்துள்ளார் இல்யாஸின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரான சர்பராஸ் என்பவர். இன்னும் இவரால்



எடுத்துக் காட்டப்படும் ஹதீத் மேற்கண்ட பெரியார்களின் பார்வைக்கு வராதிருந்திருக்கலாம் என்று சொல்வதோடு, இந்த ஸஹீஹான ஹதீதுகளுக்கு முன் பத்தாயிரமல்ல. பத்து லட்சமல்ல. பத்துகோடி பெரியார்கள் ஒன்று சேர்ந்து நபியவர்களுக்கு நிழலில்லை என்று சொன்னாலும் அதை நாம் நம்ப மாட்டோமென்றும் வீர வசனம் பேசுகிறார்.

எப்போதுமே தமது கருத்துக்களை ஆதாரப்படுத்துவதற்கு அஷ்ரப் அலி தானவி, முஹத்தித் அபதுல்ஹக் தெஹ்லவி போன்றோரின் கருத்துக்களை எடுத்துக் காட்டும் இவர் இந்தப் பிரச்னையில் மட்டும் இவருக்குக் கிடைத்த அந்த ஹதீதுகள் அவர்களுக்குக் கிடைக்காமல் போயிருக்கலாம் என்கிறார்.

ஒருவேளை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிழலில்லை என்று சொல்லும் அப்பெரியார்களுக்கு நிழலுண்டு என்பதை ஆதாரப்படுத்தும் ஹதீதுகள் கிடைக்காமல் போயிருக்கலாம் என்னும் சர்பராஸ் அவர்களின் கருத்தை ஒரு வாதத்திற்காக நாம் ஏற்றுக் கொண்டாலும் அந்த ஸஹீஹான ஹதீதுகளை தமது நூல்களில் பதிவு செய்துள்ள அந்த நூலாசிரியர்களுக்குமா தெரியாமல் போயிருக்கும்? இதில் ஆச்சரியம் என்னவெனில் இந்திய நாட்டில் ஹதீதுக்கலையை பிரபல்யப்படுத்தியவர் என்பதோடு அக்கலையின் வல்லுனர் எனப் போற்றப்படும் அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி அவர்களுக்குமா தெரியாமல் போயிருக்கும்? பின் அவர் எப்படி நபியவர்களுக்கு நிழலில்லை என்று சொன்னார்?

மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிழலில்லை என்று சொல்வோர் பித்அத்திகள் - வழிகேடர்கள் எனக்கூறும் சர்பராஸ் நிழலிருந்தது என்பதை நிரூபிக்க ஸஹீஹான நான்கு ஹதீதுகளைக் கொண்டு வருகிறார். அதில் இரு ஹதீதுகள் ஒரே விஷயத்தின் சாரம் சத்தைக் கொண்டவைகள். மற்ற இரண்டும் வெவ்வேறு தலைப்புக்களில் உள்ளவைகளாகும். இந்நான்கு ஹதீதுகளையும் எடுத்துக்காட்டி வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் சொல்லி நிழலிருந்தது என்பதை உறுதிப்படுத்துகிறார். இதில் மிகப் பெரும் ஆச்சரியம் என்னவெனில் இந்த நான்கு

ஹதீதையும் தமது நூல்களில் பதிவு செய்துள்ள அல்லாமா இப்னு ஹஜர் ஹைத்தமியும், இமாம் ஹாக்கிமும் நபியவர்களுக்கு நிழலில்லை என்னும் சுன்னத் வல் ஜமா அத்தினரின் கொள்கையைக் கொண்டவர்களாகும் என்பதே.

இன்னும் நமது பெரியார்கள் தமது நூல்களில் பதிவு செய்துள்ள ஹதீதுகளை தமக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டும் அந்த வஹ்ஹாபிகள் அவைகளுக்கு அந்நூலாசிரியர்கள் தந்துள்ள விளக்கங்களை எல்லாம் ஒதுக்கி விட்டு தமது நோக்கத்திற்கு ஏதுவாகப் பொருள் கொடுக்கின்றனர். இவர்கள் எடுத்துக் காட்டும் விளக்கங்களெல்லாம் நமது முன்னோர்களில் எவருமே சொல்லாத புதியதோர் விளக்கமாகும். எனவே இவ்வியக்கங்களின் தூய்மையற்ற இஸ்லாமியப் பணிகளைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். உங்களின் மனைவி மக்களை அவர்களுக்கு பலி கொடுத்து விடாதீர்கள்.

## எதிர்தரப்பார் கருத்தும் அதன் விளக்கமும்

**ஆதாரம் ஒன்று :-**

أخبرنا عفان بن مسلم حدثنا حماد بن سلمة حدثنا ثابت البناني عن شميسة عن عائشة رضى الله عنها أن رسول الله صلى الله عليه وآله وسلم كان في سفر فأعتل بعير لصفية وفي إبل زينب فضل فقال رسول الله صلى الله عليه وآله وسلم إن بعيرا لصفية إعتل فلو أعطيتها بعيرا من إبلك فقالت: أنا أعطي تلك اليهودية: فتركها رسول الله صلى الله عليه وآله وسلم ذا الحجة والمحرم شهرين أو ثلاثة لا يأتيها: قالت: حتى يئست منه وحولت سريري قال فبينما أنا يوما منصف النهار إذا أنا بظل رسول الله صلى الله عليه وآله وسلم مقبلا

**"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது அருமைத் துணைவியர் சிலரோடு பயணமொன்றை மேற்கொண்டிருந்தனர். (வழியில்) ஹழ்ரத் ஸபிய்யா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் ஒட்டகம் நோய்வாய்ப்படவே, ஹழ்ரத் ஸைனப் ரலியல்லாஹு அன்ஹாவிடம் ஒன்றுக்கு மேற்பட்ட ஒட்டகங்கள் இருந்ததால் அதிலொன்றை ஹழ்ரத் ஸபிய்யா ரலியல்லாஹு அன்ஹாவுக்கு கொடுத்துதவுமாறு நபியவர்கள் உத்திரவிட, எதிர்பார்த்ததற்கு நேர்மாறான பதிலை நாயகியார் தர, இதனால் சினங்கொண்டு துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய இரண்டு அல்லது மூன்று மாதம்வரை நபியவர்கள் தொடர்பை துண்டித்திருந்தார்கள். ஹழ்ரத் ஜைனப் ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றனர். நபியவர்கள் இனிமேல் என்னிடம் வருவார்கள் என்னும் எதிர்பார்ப்பை இழந்தவளாக எனது படுக்கையை தூரப் படுத்தி இருந்தேன். அப்படிப்பட்ட சமயத்தில் திடீரென ஒருநாள் மதிய வேளையில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நிழலைக் கண்டேன். அது என் பக்கமாக முன்னோக்கிக் கொண்டிருந்தது எனக் கூறுகின்றனர்."** *(அ-ர் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா, நூல்: தபகாத் இப்னு ஸஃத், பாகம்-8, பக்கம்-126, முஸ்னத் அஹ்மத், எண்-25516, பாகம்-8, பக்கம்-235)*



*இது சர்பராஸ் அவர்கள் தமது வாதத்திற்கு ஆதாரமாகவும் நமக்குப் பாதகமாகவும் எடுத்துக் காட்டும் ஆதாரங்களில் ஒன்றாகும். இந்த ஹதீத் முஸ்னத் அஹ்மத் பாகம்-8, பக்கம்-517லும், மஜ்மவுல் பஹ்ரைன் பாகம்-4, பக்கம்-206லும் பதிவு செய்யப்பட்டிருப்பதை இவர் எடுத்துக் காட்டவில்லை. இவ்விரு நூலிலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீதுகளுக்கும் தபகாத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்படும் ஹதீதுக்கும் சொல்லப்படும் வாக்கியங்களில் சிறு வித்தியாசம் தானென்ற போதிலும் பொருளில் பெரும் வித்தியாசம் இருப்பதால் அதை இங்கே சுட்டிக் காட்ட வேண்டியது நமது கடமையாகும்.*

*"நிழலைக் கண்டதும் தூரப்படுத்திய கட்டில் மற்றும் பொருட்களை வாபஸ் செய்து விட்டார்கள்" என்று மஜ்மவுல் பஹ்ரைனிலும்,*

“நிழலைக் கண்டதும் தூரப்படுத்திய படுக்கையை வாபஸ் செய்தார்கள்” என்று முஸ்னத் அஹ்மதிலும் பதிவு செய்யப்பட்டுள்ளதை நாம் சுட்டிக்காட்ட விரும்பாத வாக்கியங்களில் காணப்படும் வித்தியாசமாகும். இனி பொருளிலுள்ள வித்தியாசத்தை நமது விளக்கவுரையின் போது நாம் தருவோம். இருப்பினும் இங்கே நாம் சுட்டிக்காட்ட வேண்டிய மிக முக்கியமான ஒரு விஷயம் யாதெனில்,...

எதிர் தரப்பினர் தமது கருத்துக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டும் ஸஹீஹான அந்த ஹதீத் தபகாத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர்களும் கூறுகின்றனர். ஆனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நூரானவர்கள் என்பதை ஆதாரப்படுத்த இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்ட பல்வேறு ஆதாரங்கள் அனைத்தும் அதே இப்னு ஸஃதிலிருந்து தான் எடுக்கப்பட்டுள்ளது என்பதை இந்நூலை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதேபோல நபியவர்களுக்கு நிழலில்லை என அடுத்து எடுத்துக் காட்டப்படப் போகும் ஹதீதும் அதே இப்னு ஸஃதில்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நீங்கள் பார்க்கலாம். ஆனால் இமாம் இப்னு ஸஃத் அவர்கள் நபியவர்கள் நூரானவர்கள். அவர்களுக்கு நிழலில்லை என்னும் கொள்கையைத் தான் சொண்டிருந்தனர் என்பதையும் இந்த இடத்தில் இந்நூலை வாசிக்கும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அத்துடன் அந்த ஹதீதுக்கு இமாம் இப்னு ஸஃத் அவர்கள் சொல்லாத புதியதொரு விளக்கதை சர்பராஸ் சொல்வதுடன் இந்த அரபிச் சொல்லுக்கு இதுதான் அர்த்தமென்றும் சொல்கிறார். இவருக்குத்தான் சரியான அர்த்தம் தெரிந்திருக்கிறது போலும். அடுத்த அந்த ஹதீதையும் பாருங்கள்.,,,

**ஆதாரம் இரண்டு :-**

فلما كان شـــهر ربـــيع الأول دخل عليها فرأت ظله
فقالت إن هذا لظل رجل ومايدخل عليّ النبي صلى الله عليه
وآله وسلم فمن هذا؟ فدخل النبي صلى الله عليه وآله وسلم

**“நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ரபீவுல் அவ்வல் மாதம் என்னிடம் வருகை தந்தார்கள். நான் நபியவர்களின் நிழலைக் கண்டபோது இந்த ஆடவருடைய நிழல் யாருடையதாக இருக்குமென்று யோசித்துக் கொண்டிருக்கும் போது உள்ளே நபியவர்கள் நுழைந்தார்கள் எனக் கூறுகின்றனர் ஹழ்ரத் ஸைனப் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள்.”** (நூல்: மஜ்மவுஸ் ஸவாயித், பாகம்-4, பக்கம்-324)



நபியவர்களுக்கு நிழலிருந்ததாக எடுத்துக் காட்டப்படும் ஹதீதுகளில் இரண்டாவது ஹதீதாகும் இது. இவ்விரு ஹதீதுகளும் ஒரே சம்பவத்தைக் தனக்குள் கொண்டுள்ள இரு ஹதீதுகளாகும். இதேபோல எதிர் தரப்பினரால் எடுத்துக் காட்டப்படும் நான்காவது ஹதீதும் மஜ்மவுஸ் ஸவாயித் என்னும் அதே நூலிலிருந்து எடுத்துக் காட்டப்படுவதாகும்.

அல்லாமா நூருத்தீன் ஹைதமீ ரஹிமஹுல்லாஹ் என்பார் தான் மஜ்மவுஸ் ஸவாயித் என்னும் அந்நூலுடைய ஆசிரியராகும். இவர் ஹிஜ்ரி 807ல் இவ்வுலகை விட்டு மறைந்தவர். இவரைவிட 550 ஆண்டுகளுக்கு முன் இருந்த இமாம் ஹாகிம், திர்மிதி போன்றோர் அல்லது 400 ஆண்டுகளுக்கு முன் இருந்த இமாம் ராகிப் இஸ்பஹானி போன்றோர் அல்லது 300 ஆண்டுகளுக்குமுன் இருந்த முஸ்லிம் ஷரீபின் விரிவுரையாளர் அல்லாமா காழி இயாழ் போன்றோர் அல்லது 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட குர்ஆனின் விரிவுரையாளரான இமாம் நஸஃபியைப் போன்றோர் நிழல் இல்லையெனச் சொல்லப்பட்ட எவருடைய கருத்துக்கும் ஏன் மறுப்புக் கூறாமல் விட்டு விட்டனர்? அல்லது மஜ்மவுஸ் ஸவாயிதின் நூலாசிரியராவது நபியவர்களுக்கு நிழலில்லை என்று சொன்னவர்களின் கருத்துக்கு இந்த ஹதீதை ஆதாரமாகக் காட்டி மறுத்திருக்கலாம் அல்லவா! எனவே இமாம் ஹைதமியால் சொல்லப்படாத புதியதோர் விளக்கத்தை தான் இக்காலத்தை சேர்ந்தவர்கள் கூறுகின்றனர் என்பதை புரிந்து கொள்ளுங்கள். ஆதலால் இவர்களது விளக்கம் நம்மைப் பொறுத்தவரை நமக்கு அதிசியமான ஒன்றோ அல்லது ஆச்சரியமான ஒன்றோ அல்ல.

**ஆதாரம் மூன்று :-**

صلى بنا رسول الله صلى الله عليه وآله وسلم ذات يوم صلوة الصبح ثم مد يده ثم أخرها فلما سلم قيل له يارسول الله صلى الله عليه وآله وسلم لقد صنعت في صلوتك شيئا لم تصنعه في غيرها قـــال إني رأيت الجنة فرأيت فيها دالية قطوفها دانية حبها كالدباء فأردت أن أتناول منها فأوحى الي: ان إستأخري فأســتأخرت ثم رأيت النار فيما بــيني وبينكم حتى لقـــد رأيت ظلي وظلكم فأومأت اليكم أن أستأخروا–الحديث

**"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒருநாள் ஸுப்ஹுடைய தொழுகையை நடத்திக் கொண்டிருந்த போது தொழுகைக்குரிய நிலையிலேயே தமது முபாரக்கான கரத்தை முன் பின்னாக அசைத்தனர். அதன்பின் தொழுகை முடிந்தபோது தோழர்கள் அது தொடர்பாகக் கேட்க, அதற்கு நபியவர்கள்; எனக்கு சுவர்க்கத்தைக் காட்டப்பட்டது. அப்போது அதிலிருந்து உங்களுக்காக எதையாவது எடுக்கலாமென்று கையை நீட்ட, பின்னால் செல்லும் படியாக உத்திரவிடப்பட்டேன். அதன்பின் நரகம் எனக்குக் காட்டப்பட்டது. அதில் என்னுடையவும் உங்களுடையவும் நிழலைக் கண்டேன். உடனே பின்னால் செல்லுமாறு சைக்கினை செய்தேன் என்று பதிலளித்தனர்."** *(நூல் : ஹாதில் அர்வாஹ் இலா பிலாதில் அஃப்ராஹ், பக்கம்-18. முஸ்தத்ரக் பாகம்-4, பக்கம்-503)*

*நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிழல் இருந்ததென்பதை ஆதாரப் படுத்துவதற்கு வஹ்ஹாபிய இயக்கங்களால் எடுத்துக் காட்டப்படும் ஆதாரங்களில் மூன்றாவது ஆதாரமாகும் இது.*

*நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சுவர்க்க, நரகம் காட்டப்பட்டதாக புகாரி, முஸ்லிம், நஸாயி, திர்மிதி, முஸ்னத், அஹ்மத் போன்ற ஹதீதுக்குரிய*



*கிரந்தங்களில் ஸலாத்துல் குஸூஃப் (கிரஹணத் தொழுகை) என்னும் பிரிவில் நிறைய பார்க்கலாம். இத்தனை நூல்களில் எந்தவொரு நூலிலும் ஹாதில் அர்வாஹ், முஸ்தத்ரக் போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள (என்னுடையவும் உங்களுடையவும் நிழலைக் கண்டேன்) என்னும் வாக்கியத்தைக் காண முடியவில்லை. ஆனால் இந்த ஹதீத் அஷ்ஷரீஆ என்னும் நூலின் 408ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஹதீதை அறிவிக்கும் ஸும்ஆ பின் ஸாலிஹ் என்பவர் ழயீபானவர் எனக் கூறப்பட்டுள்ளது.*

*இதில் ஒரு ஹதீதை அறிவிப்போரில் ஒருவர் ழயீபானவர் என்பதற்காக அந்த ஹதீதையே ழயீபென்றோ அல்லது அதை ஆதாரப்படுத்த முடியாதென்றோ சுன்னத் வல் ஜமாஅத்தினர் எப்போதுமே சொன்னதில்லை. இனி சுன்னத் வல் ஜமாஅத்தினர் ழயீபான ஒரு ஹதீதையோ அல்லது புகாரி முஸ்லிமில் இல்லாத வேறொரு நூலிலுள்ள ஹதீதையோ தங்களின் கருத்தை ஆதாரப்படுத்த எடுத்துக் காட்டினால் புகாரி முஸ்லிமிலுள்ள ஹதீதைக் காட்டுங்களென்று அங்கலாய்க்கும் இந்த வஹ்ஹாபிகள் தமது கருத்தை மட்டும் ஆதாரப்படுத்துவதற்கு ஒரு ழயீபான ஹதீதை எடுத்துக் காட்டுகிறார்களே இந்த இடத்தில் இவர்களுடைய தன்மானம் இழந்துபோய் விட்டதை மட்டும் ஏன் இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை? இன்னும் முஸ்தத்ரக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ஸஹீஹான ஹதீதைத்தான் நாங்கள் எடுத்துக் காட்டினோமென்று சொல்வார்களாயின் அந்த நூலாசிரியர் ஒரு முழுமையா(பக்காவா)ன சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையைச் சார்ந்தவரென்பது கூட இவர்களுக்குத் தெரியாமல் போய்விட்டதா? பிறகு எவ்வாறு சுன்னத் வல் ஜமாஅத் தைச் சார்ந்தவரால் பதிவு செய்யப்பட்ட ஹதீதை இவர்கள் தமது கூற்றுக்கு ஆதாரமாக எடுத்தனர்?*

*மேலும் ஹாக்கிம் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் அதே முஸ்தத்ரக் என்னும் நூலிலிருந்து பல்வேறு ஆதாரங்களை இந்நூலின் முந்திய தலைப்புக்களில் நமது கூற்றுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆம். நமது பெரியார்கள் வேறொரு விஷயத்தை நிரூபிக்கக் கையாண்ட தகவல்களையெல்லாம் இவர்கள் தங்களுக்குச் சாதகமானவை என்று கருதிக்கொண்டு அந்த ஹதீதுகளுக்கெல்லாம் மனம்*

போன போக்கில் விளக்கம் கூறி அதற்கு நம்மிடமே ஆதாரமும் கேட்கின்றனர்.

இன்னும் குர்ஆன் ஹதீதைத்தான் பின்பற்ற வேண்டுமென்றும் நமது பெரியார்களது நூல்களில் நம்பத்தகாத ஹதீதுகளெல்லாம் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறும் இவர்கள், அப்பெரியார்களால் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீதுகளை எங்களுக்குப் பாதகமாகத் திரித்து எங்களிடம் கேள்வி கேட்கத் தேவையில்லை. அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டுமென்ற அவசியமுமில்லை. ஏனெனில் அவர்களின் நோக்கம் என்னவென்பது எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

எனவே எதிர்தரப்பாரால் எடுத்துக் காட்டப்பட்ட மேற்கண்ட மூன்று ஹதீதுகளுக்கும் அவைகளை பதிவு செய்துள்ள நூலாசிரியர்கள் மட்டுமல்ல. வேறு எந்தவொரு பெரியாராலும் இதுவரை சொல்லப்படாத புதிதானதோர் விளக்கத்தைத் தான் இவர்கள் சொல்கின்றனர் என்பதில் அறவே உங்களுக்கு சந்தேகம் வேண்டாம். இன்னும் இந்த ஹதீதுகளுக்கு நமது முன்னோர்களும் அந்நூலாசிரியர்களும் சொல்லாத ஒரு புதிதான விளக்கத்தை நீங்கள் ஏன் சொல்கிறீர்களென்று அவர்களிடம் கேட்டால் அதற்கவர்கள், நாங்கள் குர்ஆன் ஹதீதுக்குரிய பொருள் எதுவோ அதைத்தான் சொல்கிறோமென்று சாதிக்கின்றனர். அப்படியானால் நமது முன்னோர்கள் அந்த குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் வார்த்தைக்கு வார்த்தை அவைகளுக்குரிய அர்த்தத்தையும் விளக்கத்தையும் சொல்லவில்லையா என்றொரு கேள்வியும் எழுகிறது.

அதற்குரிய பதிலானது, ஒரு வார்த்தைக்கு ஒரேயொரு பொருள் மட்டும் தான் இருக்கிறதா என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். மேலும் ஒரு வாக்கியம் எத்தனை இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதோ அத்தனை இடங்களிலும் அவ்வார்த்தைக்கு அந்த ஒரே அர்த்தத்தை மட்டும் தான் கொடுக்க வேண்டுமா? அல்லது ஒரு வார்த்தைக்கு பல அர்த்தங்கள் இருக்கிறதா? அப்படிப் பல அர்த்தங்கள் இருந்தால் அந்த அர்த்தங்களை அவை பொருந்தக்கூடிய இடத்தில் பயன்படுத்தலாமா பயன்படுத்தக் கூடாதா?



அவ்வாறின்றி ஒரு வார்த்தைக்கு எத்தனை அர்த்தங்கள் இருந்தாலும் ஒரேயொரு அர்த்தத்தை மட்டும்தான் அந்த வார்த்தை எத்தனை இடங்களில் வந்தாலும் பயன்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லலாமா? இவ்வாறே ஒரு வார்த்தைக்குரிய முன் பின் பகுதியிலுள்ள விஷயங்கள் எப்படிப்பட்ட கருத்தை வலியுறுத்துகிறதோ அக்கருத்துக்கு ஏற்றவாறும் அவ்வார்த்தைக்குரிய பல்வேறு அர்த்தங்களில் ஒரு அர்த்தத்தைப் பயன்படுத்தலாமா?

இவ்வாறே ஒரு வசனத்தில் இடம் பெற்றுள்ள எல்லா வார்த்தைகளுக்கும் பொருள் சொல்ல வேண்டுமா? அல்லது ஒரு வசனத்திலுள்ள ஒரு வார்த்தை அல்லது ஒரு எழுத்து அந்த இடத்தில் எந்தவொரு பொருளுமில்லாமல் போவதற்குரிய வாய்ப்பிருக்கிறதா? இவைகளுக்குரிய தீர்ப்பையெல்லாம் உங்களிடமே நாம் விட்டு விட்டு அதைத் தெளிவுபடுத்தும் சில உதாரணங்களை மட்டும் உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

"ழில்லுன்" என்றால் நிழல் மட்டும்தான் அதற்குரிய அர்த்தமே தவிர வேறொரு அர்த்தமில்லை என்று நீங்கள் நினைத்தால் இப்போது பாருங்கள்.,,,

سبعة يظلهم الله في ظله يوم لاظل إلاظله

**"அல்லாஹ்வுடைய நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத நாளன்று ஏழு நபர்களுக்கு அல்லாஹ் தனது நிழலில் நிழல் வழங்குவான்"**

இந்த ஹதீத் ஸஹீஹ் முஸ்லிம் என்னும் நூலில் பாபு இக்ஃபாயிஸ் ஸதகா, பாகம்-3, பக்கம்-563லும், புகாரி ஷரீப், கிதாபுல் அதான், பாபு மன் ஜலஸ ஃபில் மஸ்ஜிதி யன்தழிருஸ் ஸலாத்த வ ஃபழ்லில் மஸாஜிதி, பாகம்-1, பக்கம்-306 லும் பதிவு செய்யப்பட்டுள்ள ஸஹீஹான ஹதீதாகும். இந்த ஹதீதை எடுத்துக்காட்டி இதில் குறிப்பிடப்படும் "ழில்லுன்" என்னும் வார்த்தைக்கு சூரிய சந்திரனில் காணப்படும் நிழலா எனக் கேட்கப்பட்ட போது,

سبعة في ظل العرش يوم لاظل إلاظله

**"அந்நாளில் அர்ஷுடைய நிழலில் ஏழு பேர்களுக்கும் நிழலளிப்பான்"**
என்னும் இப்னு அஸாகிரிலும், ஜாமிவுஸ் ஸகீர் பாகம்-2, பக்கம்-43லும் பதிவாகியுள்ள முர்ஸலான ஹதீதையும்,

سبعة يظلهم الله تحت ظل عرشه

**"அல்லாஹ் அந்த ஏழு பேர்களுக்கும் அர்ஷுடைய நிழலின் கீழ் நிழலளிப்பான்"**
என்னம் ஜாமிவுஸ் ஸகீர் பாகம்-2, பக்கம்-43ல் பதிவாகியுள்ள "ஹஸன்" என்னும் படித்தரத்தைக் கொண்ட ஹதீதையும் ஆதாரமாகக் காட்டி அல்லாஹ்வுக்கென்று நிழல் ஏதுமில்லை. அது அவனுடைய அர்ஷுடைய நிழல்தான் என்று கூறுகின்றனர். இந்த இடத்தில் முர்ஸலான ஹதீதையும், ஸஹீஹல்லாத வேறு படித்தரங்களைக் கொண்டுள்ள ஹதீதையும் தமது கருத்தை உறுதிப்படுத்துவதற்காக இவர்கள் கையாண்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். மேலும் சுன்னத் வல் ஜமாஅத்தினர் கூறுகின்ற, செய்கின்ற அனைத்துக்கும் ஸஹீஹான ஹதீதுகளை ஆதாரமாகக் கேட்கும் இவர்கள் தமது கருத்துக்களுக்கு மட்டும் ஸஹீஹல்லாத நபிமொழிகளை ஆதாரமாக ஏன் காட்டுகின்றனர்?

அப்படியானால் முர்ஸலான, ழயீபான, கரீபான ஹதீதுகளாக இருந்தாலும் அவையனைத்தும் அந்த ஹதீதை அறிவித்தவரின் நிலையைக் குறிப்பவைகளே அன்றி ஹதீதின் தரத்தைக் குறிப்பவைகளல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதேநேரம் ழயீபான ஒருவரால், முர்ஸலான ஒருவரால், கரீபான ஒருவரால் ஒரு ஹதீத் அறிவிக்கப்பட்டு ஒட்டுமொத்தமாக எல்லா ஹதீதுக்கலை அறிஞர்களும் அவரது அறிவிப்பை ஏற்றுக் கொள்ளாமல் விட்டு விடுவார்களாயின் அந்த நிலையில்தான் அந்த ஹதீதை எந்த ஒன்றுக்கும் ஆதாரமாகக் காட்ட முடியாது.

அவ்வாறின்றி இமாம் புகாரியால், இமாம் முஸ்லிமால் ஒருவர் நம்பத்தகுந்தவரல்ல எனக் கருதப்பட்டு விடப்பட்டுப் போன ஒருவருடைய தகவலை வேறொரு பெரியாரால் பதிவு செய்யப்படுமாயின் அத்தகவலை ஆதாரமாகக் கொள்ள முடியுமென்பதே ஏகமனதான தீர்ப்பாகும். இத்



தீர்ப்பு வஹ்ஹாபியர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றுதான். அதனால்தான் முர்ஸலான, ஹஸனான எத்தனையோ ஹதீதுகளை சுன்னத் வல் ஜமாஅத்தின் அறிஞர்கள் ஆதாரமாகக் கையாளுகின்றனர்.

இனி குர்ஆனையும் ஹதீதையும் தான் பின்பற்ற வேண்டும். இமாம்களையோ அவர்களால் வகுத்தளிக்கப்பட்ட மத்ஹபுகளையோ பின்பற்றக் கூடாதென இரவு பகலாக மேடை போட்டு வாய்கிழியப் பிரச்சாரம் செய்கிறார்களே! இதற்குரிய ஆதாரம் குர்ஆன் ஹதீதிலிருக்கிறதா? அல்லது புகாரி முஸ்லிமில் தானிருக்கிறதா? நல்லோர்களது கப்ருகளின் மீது கட்டப்பட்டுள்ள குப்பாக்களை எல்லாம் உடைத்தெறியுங்கள். அவைகளை தரைமட்டமாக்குங்கள் என்று ஆவேசமாக ஊளையிடுகிறார்களே! அதற்கவர்கள் ஆதாரமாக ஸஹீஹ் முஸ்லிமில் இருந்து ஒரு ஹதீதை கொண்டு வருகிறார்களே! அந்த ஹதீதை அறிவிக்கும் அறிவிப்பாளர்களில் ஒருவரான வகீஃ என்பவர் ஒருவரால்கூட (ஜுர்ஹ்) குற்றம் சாட்டப்படாதவரா? இதை அவர்கள் ஆதாரமாக எடுத்தார்களென்றால் இது அவர்களுக்கு, அவர்களின் கண்டு பிடிப்புக்களுக்கு தோதாக இருப்பதுதான் காரணமாகும். பிறகு ஏன் சுன்னத் வல் ஜமாஅத்தினரிடம் மட்டும் ஸஹீஹான ஹதீதைக் காட்டுங்களென்று கேட்கிறார்கள் என்பதாக யோசிக்கிறீர்களா?

சுன்னத் வல் ஜமாஅத்தினர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை தமது உயிருக்கும் மேலாக மதிப்பவர்களும் அவர்களின் அகமியத்தை அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறுயாராலும் அறிய முடியாதென்று நம்புகின்றவர்கள். ஆனால் இவர்கள் தமது ரஸூலை தம்மைப் போன்றவரெனவும், அவர்களின் அகமியத்தை தமது வாயால் ஊதி அணைத்து விடலாமென்றும் நினைத்துக் கொண்டிருப்பது தான் இதற்குரிய காரணமாகும்.

மேலும் சுன்னத்வல் ஜமாஅத்தைத் தவிரவுள்ள ஏனைய எல்லா ஜமாஅத்துக்களையும் நீங்கள் கவனித்துப் பார்ப்பீர்களாயின் அவர்களது சொல்லிலும் செயலிலும் இன்னொரு தேசத்தின் தொடர்பிருப்பதையும் அவ்வியக்கத்திற்கும் அதைத் தோற்றுவித்தவர்களுக்கும் யூத, நஸா

ராக்களோடு நெருக்கமான உறவு இருப்பதையும் வரலாற்றின் வெளிச்சத்தை வைத்து நாம் தெரிந்து கொள்ளலாம்

இனி அல்லாஹ் நூரானவனாகையால் அவனுக்கு நிழலில்லை. இனி அல்லாஹ்வின் நிழலில் இருப்பார்களென்று கூறப்பட்டதன் கருத்து அது அர்ஷுடைய நிழலாகும் என்று சொல்கிறீர்களே! அந்த அர்ஷும் நூரால்தானே படைக்கப்பட்டுள்ளது? இந்நிலையில் அதற்கு நிழல் எப்படி இருக்க முடியும்? இன்னும் அந்த அர்ஷ் அல்லாஹ்வுடைய சிம்மாசனம் என்றும் சொல்கிறீர்களே! உருவமற்றவனுக்கு சிம்மாசனம் எதற்கு? இன்னும் பாருங்கள்.

السلطان ظل الله فى الأرض

**"அரசன் பூமியில் நடமாடும் அல்லாஹ்வின் நிழலாகும்"**

السلطان العادل المتواضع ظل الله

**"நீதமுள்ள பணிவான அரசன் அல்லாஹ்வின் நிழலாகும்"**

என்ற ரஃப்வுல் கிஃபா என்னும் நூலின் பாகம்-1, பக்கம்-403ல் பதிவாகியுள்ள ஹதீதுகளில் பேசப்படும் நிழல் என்பது இந்நூலை வாசிக்கும் உங்களுக்கு இருப்பதைப் போன்ற நிழலா? இன்னும்,,,

فلان في ظل فلان

**"இன்னார் இன்னாருடைய நிழலில் இருக்கிறார்"**

என்னும் அரபுப் பழமொழியில் பேசப்படும் நிழல் என்பது சூரிய சந்திரனின் நிழல் என்பதாகப் பொருள் சொல்லலாமா? அரபி மொழியில் புலமை வாய்ந்த எல்லோருமே "ழில்லுன்" என்பதற்கு சூரிய சந்திரனில் காணப்படும் நிழல் மட்டும்தான் என்று சொல்வார்களா? ஒரு வார்த்தைக்கு ஒரேயொரு அர்த்தம் தானெனில் அகராதி என்பது எதற்கு? பதில் தரட்டுமே பார்ப்போம்.

மேற்கண்ட ஒன்றிரண்டு ஹதீதுகளிலும், அரபுப் பழமொழியிலும் எடுத்துக் காட்டப்பட்ட "ழில்லுன்" என்னும் வார்த்தைக்கு எந்த அர்த்தம் பொருந்தும் என்பதை



"ழில்லும் அதன் பொருளும்" என்னும் தலைப்பை மீண்டுமொரு முறை எடுத்துப் பார்த்து முடிவு செய்வதுடன் ஒரு வார்த்தைக்கு ஒரு அர்த்தம் தானென்னும் மூட நம்பிக்கையை விட்டு விட்டு "ழில்லுன்" என்றால் சூரிய சந்திரனில் காணப்படும் நிழல் மட்டுமல்ல. அதற்கு இன்னும் பல அர்த்தங்கள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்வதோடு, இந்த நய வஞ்சகர்கள் தமது ஆதாரமாக எடுத்துக் காட்டிய ஹதீதுகளுக்கு நமது பெரியோர்கள் தந்துள்ள விளக்கங்களைப் படிக்கத் தயாராகுங்கள்.

"ழில்லும் அதன் பொருளும்" என்னும் தலைப்பில் "ழில்லுன்" என்ற வார்த்தைக்கு "ஷக்ஸுன்" (மனிதர்) என்றொரு அர்த்தமும் உண்டென்பதாகக் குறிப்பிட்டிருந்தோம். அதற்கொப்ப சர்பராஸ் என்பவரால் எடுத்துக் காட்டப்பட்ட மேற்கண்ட மூன்று ஹதீதிலும் "ழில்லுன்" என்பதற்கு சூரிய சந்திரனில் காணப்படும் நிழலல்ல. மாறாக மனிதர் என்பதாகும். அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களாகும் என்பதுதான் அதற்குரிய பொருளாகும். அதாவது ஹழ்ரத் ஸைனப் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் நபியவர்களைத் தான் கண்டார்கள். நமக்குள் காணப்படும் நிழலையல்ல. ஏன் தெரியுமா?

மஜ்மவுஸ் ஸவாயித், மஜ்மவுல் பஹ்ரைன், முஸ்னத் அஹ்மத், தபகாத் இப்னு ஸஃத் போன்ற நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் இரண்டு ஹதீதுகளும் ஒரே நிகழ்ச்சியைக் குறிக்கின்றவைகளாகும். அது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய இறுதி ஹஜ்ஜாகிய ஹிஜ்ரி 10ம் ஆண்டில் "ஹஜ்ஜத்துல் வதாஃ"வுக்குப் பின் நிகழ்ந்த சம்பவமாகும்.

அதாவது நபியவர்கள் இவ்வுலக வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தை நெருங்க ஒரு சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றதாகும். துல்ஹஜ் கடைசி வாரம், அல்லது முஹர்ரம், ஸபர், ரபீவுல் அவ்வலின் முந்திய சில தினங்களாகும். அதாவது கிறிஸ்துவ கணக்கின் படி 632ம் ஆண்டு ஜுன் மாதம் நடைபெற்ற நிகழ்ச்சியாகும்.

குறிப்பாகச் சொல்வதென்றால் கிறிஸ்துவக் கணக்கின்படி நாயகியவர்கள் நபியவர்களை மே மாதம் அல்லது

ஜுன் மாதத்தில் கண்டிருக்கிறார்கள். இவ்விரு மாதமும் வெயில் காலத்திற்குரிய மாதமாகும். வெயில் காலத்தில் ஒருவருடைய நிழல் எங்கேயிருக்கும் என்பதை உங்களைக் கொண்டே நீங்கள் பரிசோதித்துப் பாருங்கள். முன்னால் நிழல் விழுவதற்குரிய சாத்தியமேயில்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

முதலில் எடுத்துக் காட்டப்பட்ட ஹதீத் "தபகாத் இப்னு ஸஃதில்" பதிவு செய்யப்பட்டுள்ளதாக சொன்னபோது இதே ஹதீத் முஸ்னத் அஹ்மதின் எண்-25516,26780லும் பதிவு செய்யப்பட்டுள்ளதையும் குறிப்பிட்டிருந்தோம். அதில்,

"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களுக்கு முன்னதாக நபியவர்களின் நிழலைக் கண்டார்கள்" என்று கூறப்பட்டுள்ள வாக்கியம், தபகாத் இப்னு ஸஃதில் கூறப்பட்டுள்ளதற்கு சர்பராஸ் தருகின்ற விளக்கமாகும். ஆனால் "நிழலைக் கண்டதும் நாயகியவர்கள் தமது படுக் கையையும் இதர பொருட்களையும் மீட்டுக் கொண்டார் கள்" என்னும் வாக்கியம் முஸ்னத் அஹ்மத், மஜ்மவுல் பஹ்ரைன் ஆகிய இரு நூல்களிலும் கூறப்பட்டுள்ளதாகும்.

மதிய வேளையில் ஒரு மனிதருடைய முன் பக்கத்தில் நிழல் தெரியாதென்பது ஒரு பக்கமிருக்க, நிழலைப் பார்த்த தும் அவர் இன்னார் தானென்று முடிவுசெய்து பயணத்தை எப்படி ரத்து செய்தார்கள்? என்பது போன்ற கேள்விகளுக் கெல்லாம் நாம் இடமளிக்கக் கூடாதென்பதற்காகத் தான் ஹழ்ரத் ஸைனப் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் நிழலைக் கண்டபோது நபியவர்களைத் தான் கண்டார்கள் என்று நாம் சொன்னதற்கு,,,

அப்படியானால் நபியவர்களைப் பார்த்ததற்குப் பிறகும்கூட நாயகியவர்களால் வந்திருப்பவர் நபியவர்கள் தானென்பதை ஊகித்துக்கொள்ள முடியாமல் வியப் படைந்து இவர் யாராக இருக்குமென்று சொன்னார்? என்பதாக ஆவேசமாக நம்மிடம் கேட்கின்றனர்.

வெயில் காலத்தில் அதுவும் மதிய வேளையில் ஆளுக்கு முன்னால் நிழல் தென்படாததால் தான் அந்த இடத்தில் "ழில்லுன்" என்பதற்கு நபியவர்கள் தானென்



றும், நபியவர்களைக் கண்டதால் தான் நாயகியவர்கள் தமது பயணத்தை ரத்து செய்தார்களென்றும் இங்கே பொருத்தமானதொரு விளக்கம் தரப்பட்டாலும் மஜ்மவுஸ் ஸவாயித் எனும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீதுக் குரிய விளக்கத்தையும் நாம் உங்களுக்குச் சொல்ல கடமைப் பட்டுள்ளோம். ஏனெனில் எப்போதுமே நம்மவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை எல்லாவற்றையும் விட மிக மிக உயர்வானவர்களாக மதிப்பதால் இந்நிகழ்ச்சியைக் குறித்த சூழ்நிலையை சற்று ஆழமாக சிந்திக்குமாறு வேண்டுகிறோம்.

ஒருசில நேரங்களில் ஒரு நிகழ்ச்சியை விளங்க வைக்க தம்மையே உதாரணப்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்பந் தம் ஏற்படுவதுண்டு. அதற்கொப்ப இவ்விடத்தில் உங்களை நீங்களே உதாரணமாகக் கொண்டு இந்நிகழ்ச்சியைக் குறித்த சூழ்நிலையை விளங்க வேண்டுகிறோம்.

அதாவது உங்களுக்கு ஒரு நண்பர் இருக்கிறார். அவரை நீங்கள் மிகவும் நேசிக்கிறீர்கள். அவர் உங்களுடைய ஒரு செய்கையின் காரணமாக உங்கள்மீது வெறுப்புக் கொண்டு உங்களைப் பல மாதங்களாக சந்திக்க வராதிருக்கிறார். அதேநேரம் அவர் மரணப் படுக்கையிலும் இருக்கிறார். இந் நிலையில் அவர் உங்களை சந்திக்க வருவதற்குரிய வாய்ப்பு அறவேயில்லை என்னும் ஆழ்ந்த கவலையில் நீங்கள் அவ ரையே நினைத்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று அவர் உங்களுக்கு முன்னால் வந்தால் அப்போது உங்களின் மனநிலை ஹழ்ரத் ஸைனபுடைய மனநிலைக்கொப்ப இருக் குமா? அல்லது வேறு மாதிரியாக இருக்குமா என்பதை ஒரு வினாடி யோசித்துப் பாருங்கள்.

இங்கே ஹழ்ரத் ஸைனப் ரலியல்லாஹு அன்ஹாவின் மீது கொண்ட சினத்தால் மூன்று மாதங்களாக அவர்களின் தொடர்பையே துண்டித்துக் கொண்டிருந்த நாயகம் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஹிஜ்ரி 11ம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதம் மிகவும் சுகவீனமடைந்து சுயமாக எழுந்து நடக்கக்கூட முடியாதவர்களாக இருந்தனர். இதைத் தெரிந்து கொண்டிருந்த அன்னையவர்கள் இனிமேல் நபிய வர்கள் நம்மிடம் வரவே மாட்டார்களோ என்ற ஆழ்ந்த

கவலையில் மூழ்கி இருக்கும்போது திடீரென நபியவர்கள் அவர்கள் முன்னால் வந்து நின்றதும் ஒரு கணம் இது நபியவர்களல்ல. வேறு யாரோ என யோசித்துக் கொண்டிருக்கும் போது நபியவர்கள் வீட்டுக்குள் நுழைகிறார்கள். இது தான் அந்த ஹதீதுக்குரிய விளக்கமேயன்றி எப்போதுமே தன்னைவிடத் தாழ்ந்த ஒரு சாதாரண மனிதராகத் தமது ரஸூலைப் பார்க்கும் இந்த வஹ்ஹாபிகளுக்கு அன்னையவர்கள் தமது ரஸூலின்மீது கொண்டிருந்த அந்த நேசத்திற்குரிய மனோநிலையை இவர்களால் புரிந்துகொள்ள முடியாது. காரணம் இவர்களுக்கு நேசமென்றால் என்னவென்ற அர்த்தமும் தெரியாது. நேசிக்கவும் தெரியாது. அத்துடன் நேசிக்கின்றவர்கள் தான் தனது ரஸூலின் எதார்த்தம் என்ன என்பதையும் விளங்கி அதற்கு ஒரு சிறு களங்கம் கூட நேர்ந்து விடாமல் விளக்கமும் தருவார்கள். இது இவர்களால் எடுத்துக் காட்டப்பட்ட இரண்டு ஹதீதுகளுக்குமுரிய விளக்கமாகும். இனி,...

**மூன்றாம் ஹதீதுக்கான விளக்கம் :-**

மூன்றாம் ஹதீதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே தமது நிழலை நரகத்தில் பார்த்ததாகக் கூறுகின்றனர். இனி நிழல் தெரிய வேண்டுமாயின் வெளிச்சம் அவசியமாகும். இருட்டில் நிழல் தெரியாது. இதில் நரகத்தின் நெருப்பு எப்படியிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

عن ابى هريرة رضى الله عنه عن النبي صلى الله عليه وآله وسلم قال: أوقد على النار ألف سنة حتى إحمرت ثم أوقد عليها ألف سنة حتى إبيضت ثم أوقد عليها ألف سنة حتى إسودت فهي سوداء مظلمة

**“நரக நெருப்பு ஆயிரம் ஆண்டுகள் மூடப்பட்டது. அதனால் அது சிவப்பு நிறமுடையதாயிற்று. பின்னர் மீண்டும் ஆயிரம் ஆண்டுகள் மூடப்பட்டது. அதனால் அது வெள்ளை நிறமுடையதாயிற்று. பின்னர் மறுபடியும் ஆயிரம் ஆண்டுகள் மூடப்பட்டது. அதனால் அது காரிருளாயிற்று என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறினர்.”**



*(அ-ர் ஹழ்ரத் அபூஹுறைரா ரலியல்லாஹு அன்ஹு, நூல் : திர்மிதி, மிஷ்காத், கிதாபுல் ஃபித்தன், பாபு ஸிஃபத்தின் நாரி வ அஹ்லிஹா. மிர்காத், பாகம்-9, பக்கம்-644)*

எனவே நரகத்தின் நெருப்பு கருப்பு நிறமுடையதென்று காத்தமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ்ஸல்லமவர்களே தெளிவுபடுத்தி விட்டதால் நரக நெருப்புக்கு வெளிச்சம் எப்படி இருக்க முடியும்? வெளிச்சமில்லை என்றால் நிழல் எப்படித் தெரியும்? அப்படியானால் “ழில்லுன்” என்பதற்கு முந்திய இரு ஹதீதுகளுக்கும் என்ன பொருள் தரப்பட்டதோ அதுதான் இந்த ஹதீதுக்குமுரிய விளக்கமாகும். அவ்வாறாயின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தம்மையே நரகில் கண்டார்களென்று சொல்கிறீர்களா? எனக் கேட்கப்பட்டால்,...

இப்படியொரு எண்ணம் உள்ளத்தில் ஊசலாடுவதை விட்டும் அல்லாஹ்விடம் அந்த நபியின் பொருட்டால் பாதுகாப்புத் தேடுகிறோம். அப்படியாயின் அதற்குரிய விளக்கமானது, “எனது உம்மத்தினர் குழப்பங்களுக்குள் சிக்கிக்கொள்ள வேண்டி வரும்” என்பதுதான் அதற்குரிய பொருளாகும் என நபியவர்களே விளக்கமளித்து விட்டார்கள்.

இனி அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தம்மை நரகில் கண்டதாகச் சொன்னதும் அதைக் கேட்டு அவர்களைப் பற்றிய தவறானதொரு எண்ணம் உங்களுக்குள் ஏற்பட்டதற்காக அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிய நீங்கள், அதற்குரிய கருத்து அதுவல்ல என்பதையும் சுட்டிக் காட்டினீர்கள். அப்படியானால் நபியவர்களுக்கு நெருப்பைக் காட்டப்பட்ட போது அதைக்கண்ட பயத்தினால் பின்வாங்குமாறு சைக்கினை செய்தார்கள் என்றால் நபியவர்களுக்கு நரகத்தின் நெருப்பு தன்னைத் தீண்டிவிடும் என்று பயந்தார்கள் என்றுதானே சொல்ல வேண்டும்?

ஆம். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தம்மை நெருப்பு தொட்டுவிடக் கூடாதென்று பயந்தார்கள். அதனால்தான் உடனே பின்வாங்குமாறு சைக்கினையும் செய்தார்கள் என்பதில் சொஞ்சங்கூட சந்தேகமில்லை.

அவ்வாறாயின் அந்த நெருப்பு தன்னைத் துன்பத்திற்

குள்ளாக்கும் என்பதால் தானே நபியவர்கள் பின்வாங்கினார்கள்?

இல்லை. நிச்சயமாக, சத்தியமாக இல்லை. ஏன் பயந்தார்கள் தெரியுமா? அந்த நெருப்பு தன்னைத் தொட்டால் எங்கே அணைந்து விடுமோ என்றுதான் பயந்தார்கள். அதனால் தான் பின்வாங்கினார்கள். இதுதான் இறை நம்பிக்கையாளர்களின் அகீதாவாகும். மேலும் இந்த ஹதீத் "ஆலமுல் மிஸால்" என்னும் உலகைச் சார்ந்த விஷயமாகும். அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் தோற்றமாகும் ஆற்றலை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியிருந்தான் என்பதையும் இந்நபிமொழி நமக்கு உணர்த்திக் காட்டுகிறது. இதையெல்லாம் வஹ்ஹாபிகளான வம்பர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதுதான் மூன்றாவது ஹதீதுக்கான விளக்கமாகும்.

**நான்காம் ஹதீதும் அதன் விளக்கமும் :-**

عن ابى هريرة رضى الله عنه: أنه ذكر أن رسول الله صلى الله عليه وآله وسلم حدثهم أن جبريل عليه السـلام جائه فصلى به الصلوات وقتين وقتين إلاالمغرب جائني صلى بي الظهر حين كان فيئ مثل شـراك نعلي ثم جائني فصلى بي العصر حين كان فيئ مثلي......ثم جائني من الغد فصلى الظهر حـين كان الفيئ مثلي ثم جائني فى العصر فصلى بي حين كان فيئ مثلي

**"ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொண்டு அறிவிக்கின்றனர். ஒரு முறை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வருகைதந்த ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாமவர்கள் மஃரிப் நேரத் தொழுகையைத் தவிர மற்ற இரண்டு இரண்டு நேரத் தொழுகைகளைத்**



**தொழ வைத்தார்கள். ழுஹர் தொழுகையைத் தொழ வைத்த போது நிழலானது நபியவர்களின் முபாரக்கான பாதணியின் பட்டியளவுக்கு இருந்தது. பின்பு வருகைதந்த ஜிப்ரீலவர்கள் அஸர் தொழுகையைத் தொழ வைத்தார்கள். அப்போது நிழல் என்னைப் போலிருந்தது. பின்பு மீண்டும் மறுநாள் என்னிடம் வருகைதந்தவர்கள் ழுஹர் தொழுகையைத் தொழ வைத்தார். அப்போது நிழல் என்னைப் போலிருந்தது. பின்பு அஸர் நேரத்தில் வருகை தந்தவர் அஸரைத் தொழ வைத்தார். அப்போதும் நிழல் என்னைப் போலிருந்தது."** *(நூல் : மஜ்மவுஸ் ஸவாயித், பாகம்-1, பக்கம்-303)*

இந்த ஹதீத் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிழல் இருந்ததென்பதை ஆதாரப்படுத்துவதற்கு எதிர் தரப்பினரால் எடுத்துக் காட்டப்படும் ஹதீதாகும். இதுவும் மஜ்மவுஸ் ஸவாயித் என்னும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீத் தான். ஆக நான்கு ஹதீதுகளில் இரண்டு ஹதீதுகள் மேற்கண்ட நூலிலிருந்து தான் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் குர்ஆனுடைய வசனமாக இருந்தாலும் ஹதீதாக இருந்தாலும் ஒன்று இன்னொன்றோடு தொடர்புடையதாக இருக்கிறதா என்பதைப் பார்ப்பதோடு இவ்விரு கிரந்தங்களின் விரிவுரையாளர்கள் இதற்கென்ன விளக்கமளிக்கின்றனர் என்பதையும் பார்க்க வேண்டும். ஆனால் இதில் எதையுமே பார்க்க மாட்டோமென்று அதன் வெளிப்படையான வாக்கியத்திற்கு மட்டுமுள்ள நேரடியான அர்த்தத்தைச் சொன்னதன் மூலம் இவர்கள் தமது அறியாமையைத் தாமாகவே வெளிப்படுத்திக் காட்டி விட்டனர்.

இன்னும் சுன்னத் வல் ஜமாஅத்தினர் இவர்களது அடிப்படைக் கருத்துக்களுக்கு மாறுபட்டவர்கள் என்பதால் இந்த ஹதீதுக்குரிய நேரடியான பொருளைச் சொல்வதை விட்டு விட்டு இந்த ஹதீதுக்கும் ஏனைய ஹதீதுகளுக்குமுள்ள தொடர்பையும், இந்த ஹதீத் எது சம்பந்தமான விஷயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

இந்த ஹதீத் தொழுகை சம்பந்தமாக தொழுகைக்

குரிய நேரங்களை விபரிக்கும் பாடத்தில் பதிவாகியுள்ள தோடு ஸிஹாஹ் ஸித்தா எனப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஆறு கிரந்தங்களில் ஒருசில கிரந்தங்களில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஹதீதுக்கும் வேறு சில பிரபலமான ஹதீத் கிரந்தங்களிலுள்ள ஹதீதுகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை நாம் பார்க்கலாம். அதாவது,-

أن النبي صلى الله عليه وآله وسلم قال: أمني جبريل عليه السلام عند البيت مرتين فصلى الظهر فى الاولى منهما حين كان الفيئ مثل الشراك ثم صلى العصر حين كان كل شيئ مثل ظله---- وصلى المرة الثانية الظهر حين كان ظل كل شيئ مثله ثم صلى العصر حين كان كل شيئ مثليه- الحديث

**"அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறுகின்றனர். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் இருமுறை கஃபத்துல்லாஹ்வில் எனக்கு இமாமத்துச் செய்தார்கள். அதில் முதல்முறை ழுஹர் தொழுகையை தொழ வைத்தபோது நிழல் செருப்புடைய பட்டியின் அளவுக்கு இருந்தது. பின்பு அஸர் தொழுகையைத் தொழ வைத்தபோது நிழலானது ஒவ்வொரு பொருளுக்குரிய அளவில் இருந்தது. பின்பு இரண்டாம் முறையாக ழுஹரைத் தொழ வைத்தபோது நிழலானது ஒவ்வொரு பொருளின் அளவுக்கு இருந்தது. பின்பு அஸரைத் தொழ வைத்தார்கள். அப்போது நிழல் ஒவ்வொரு பொருளின் அளவில் இரு மடங்காக இருந்தது."**

இது இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுவால் முன்மொழியப்பட்டதாகும். இன்னும் இந்த ஹதீத் திர்மிதி, கிதாபுஸ் ஸலாத், பாபு மவாகீத்துஸ் ஸலாத்தில் பாகம்-1, பக்கம்-200லும், ஸுனன் அபீதாவூத், பாபு மாஜாஅ ஃபில் மவாகீத், பாகம்-1, பக்கம்- 274லும், முஸ்தத்ரக்குல் ஹாக்கிம், பாபு மவாகீத்திஸ் ஸலாத்தி, பாகம்-1, பக்கம்-306லும், முஸ்னத் அஹ்மத், பாகம்-1, பக்கம்-840லும், தப்ரானி முஃஜிமுல் கபீர், பாகம்-10, பக்கம்-309லும், முஸ்னத் அப்திர்ரஸ்ஸாக், பாகம்-1, பக்கம்-531லும், முஸ்னத் அபீ



யஃலல் மௌஸிலி, பாகம்-5, பக்கம்-135லும், முஸ்னத் இப்னு அபீ ஷைபா, பாகம்-1, பக்கம்-317லும், இப்னு குஸைமா, எண்-325லும், ஸுனன் பைஹக்கீ, பாகம்-1, பக்கம்-364லும், ஸுனன் தாரகுத்னீ, பாகம்-1, பக்கம்-265லும், முஸ்னத் அப்த் பின் ஹுமைத், எண்-703லும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனைத்து நபிமொழிக் கிரந்தங்களிலும் ஒரு மாதிரியாகவும், எதிர்தரப்பினர் எடுத்துக் காட்டும் ஹதீத் வேறொரு மாதிரியாகவும் அதுவும் ஒரேயொரு நூலில் மட்டும் குறிக்கப்பட்டிருப்பதால் இதைக்கொண்டு எதையும் நிரூபிக்க முடியாது. ஆதலால் இந்த ஒரேயொரு ஹதீதை மட்டும் காரணமாக்கி நபியவர்களுக்கு நிழலிருப்பதாகச் சொல்வோர் இச்சமுதாயத்திலுள்ள முனாபிக்கீன்கள் என்பதில் ஐயமுற வேண்டாம். இன்னும் இவ்விரு ஹதீதிலும் தேவைக்குரிய பகுதியையும் அதற்குரிய விளக்கத்தை மட்டுமே இங்கே இடம்பெறச் செய்துள்ளோம் என்பதை வாசிப்போர் தெரிந்து கொள்வார்களாக.

மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிழல் இருந்ததற்குரிய ஸஹீஹான ஹதீத் இருப்பதால் தான் நிழலுண்டு எனக் கூறுகிறோமென்று வாதிக்கும் எதிர்தரப்பினர் அவ்விரு ஹதீதையும் எந்த நூலிலிருந்து எடுத்தார்களோ அதே நூலிலிருந்து சில ஸஹீஹான ஹதீதுகளை உங்களின் பார்வைக்கு தருகிறோம். அதன்பின் இவ்விஷயத்தில் உங்களின் தீர்ப்பென்ன என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.

1. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இப்போது ஆலமுல் பர்ஸக் என்னும் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது கூட நமது பாவங்கள், கஷ்டங்கள், தேவைகள் நீங்கிட எப்போதும் அந்த நபியவர்களின் பொருட்டால் மட்டுமல்ல. அவர்களிடமே கேட்கலாம் என்பதற்கு ஆதாரமாக ஹழ்ரத் உஸ்மான் பின் ஹனீப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தகவலை சுன்னத் வல் ஜமாஅத்தினர் எடுத்துக் காட்டுகின்றனர். ஆனால் எதிர் தரப்பினரோ இதை ஒரு ழயீபான தகவலெனக்கூறி இந்த ஹதீதையே மறுத்து வருகின்றனர். இந்த ஹதீத் மஜ்மவுஸ்

ஸவாயித், பாகம்-2, பக்கம்-279ல் பதிவு செய்யப்பட்டு ஸஹீ ஹான ஒன்றென்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இதைப் பற்றிய இவர்களின் கருத்தென்ன என்பதை நாம் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

2. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களுக்கு மௌத்தும் ஹயாத்தும் இரண்டுமே சமம்தான். அவர்கள் ஆலமுல் பர்ஸகில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தமது உம்மத்துக்களின் ஒவ்வொரு செயலையும் பார்த்துக் கொண்டு தானிருக்கின்றனர். இதை ஆதாரப்படுத்தும் ஹதீத் அதே மஜ்மவுஸ் ஸவாயிதிலும் இடம் பெற்றுள்ளது. இதைப்பற்றி இவர்கள் என்ன சொல்லுகின்றனர்?

3. நபிமார்கள் மட்டுமல்ல. வலிமார்கள் கூட தமது இறப்புக்குப் பின்னர் உயிரோடு தானிருக்கின்றனர் என்பதற் கும், ஸியாரத்துச் செய்கின்றவர்களை கப்ருக்குள் இருக்கும் அவர்கள் பார்த்துக் கொண்டுதானிருக்கின்றனர் என்பதும் சுன்னத் வல் ஜமாஅத்தினரால் அன்னை ஆயிஷா ரலியல் லாஹு அன்ஹாவைக் கொண்டு அறிவிக்கப்படும் ஹதீதும் அதே மஜ்மவுஸ் ஸவாயிதின் பாகம்-8, பக்கம்-26ல் பதிவாகி யுள்ளது. இதற்கு இவர்களின் பதிலென்ன?

4. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களுடைய முபாரக்கான மேனியிலிருந்து வெளியாகும் எல் லாப் பொருட்களுமே பரிசுத்தமானவை என்பது சுன்னத் ஜமாஅத்தினரின் நம்பிக்கையாகும். அதிலொன்று குருதியு மாகும். நபியவர்களின் அக்குருதியை ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குடித்தார் களென்ற தகவல் அதே மஜ்மவுஸ் ஸவாயிதில் பதிவு செய்யப் பட்டுள்ளது. இவ்விஷயத்தில் இவர்களின் தீர்ப்பென்ன?

இன்னும் எதிர்தரப்பினரால் நிழலுண்டு என்பதற்கு ஆதாரமாக எடுக்கப்பட்ட ஒரு ஹதீத் ஹாக்கிம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டிருப்பதால் நாமும் அந்நூலிலி ருந்தே ஒரு ஹதீதை முன்வைக்கிறோம். அதாவது,

பெண்கள் கப்ருகளுக்குச் செல்லக்கூடாதென தடை விதிக்கப்பட்ட சட்டம் ஸியாரத்துச் செய்யுங்கள் என்னும் சட்டத்தின் மூலமாகத் திருத்தியமைக்கப்பட்டு விட்டதால்



இப்போது பெண்களும் ஸியாரத்துச் செய்யலாம் என்பதற் கான ஹதீத் ஹாக்கிம், 1:530ல் பதிவு செய்யப்பட்டுள் ளமைக்கு இவர்கள் என்ன விளக்கம் தரப் போகிறார்கள்?

இதுவரை நாம் எடுத்துக் காட்டியவைகளை எல்லாம் இவர்கள் ஏற்றுக் கொள்வார்களா எனில் இல்லை என்னும் பதில் ஒரு புறமிருக்க இவைகளைப் பொய்யாக்குவதற்குரிய காரணம் என்ன என்பதைத்தான் தேடுவார்கள். இன்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஒரு சாதாரண மனிதராகக் கருதுவது ஒன்று மட்டும் தான் இவர்களின் அடிப்படை நோக்கம் என்பதை மறந்துவிட வேண்டாம். இவர்கள் ஒருபோதும் சுன்னத் வல் ஜமாஅத் தினரின் கருத்துக்களை ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். ஆதலால் இவர்களின் சகவாசத்திலிருந்து அல்லாஹ் நம் மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு அல்லாஹ்விடம் நாம் பிரார்த்தித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அடுத்து எதிர்தரப்பினரால் சுட்டிக் காட்டப்பட்ட நான்காவது ஹதீதுக்கு நாம் விளக்கம் தர வேண்டும். ஆகை யால் அந்த ஹதீதை மற்ற கிரந்தங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் அப்போது தான் அதற்குள் ஒளிந்து கொண்டிருக்கும் உண்மை வெளியே வரும்.

இவர்கள் சுட்டிக்காட்டும் ஹதீதில் முதல்நாள் ழுஹர் தொழுகையின் போது நிழல் நபியவர்களின் முபாரக்கான பாதணியின் பட்டியின் அளவுக்கு இருந்ததாகச் சொல்கி றார்கள். மற்ற நூல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல யாருடைய பாதணியின் பட்டி என்று சொல்லாமல் பொதுவாக பாதணியின் பட்டி போலிருந்தது என்கின்றனர். ஆதலால் இதில் நிழல் என்பது அப்பாதணியுடையதே அன்றி நபியவர்களுடையதல்ல.

முதல்நாள் அஸர் தொழுகைக்கான நேரம். இவர்க ளால் சுட்டிக்காட்டப்படும் ஹதீதில் நிழல் என்னைப் போலிருந்தது என்று சொல்கிறார்கள். மற்ற நூல்களில் ஒவ்வொரு பொருளுடைய நிழலும் அப்பொருளுக்குரிய அளவுக்கு இருந்ததாக சொல்கிறார்கள். இந்த இடத்தில் இவ்விரு வார்த்தைக்குமுரிய ஒற்றுமை என்னவெனில் ஒவ் வொரு பொருளுடைய நிழலும் அப்பொருளின் அளவுக்கு

இருந்தது என்பதைத்தான் நிழல் என்னைப் போலாகி விட்டதென்று சொல்கிறார்கள்.

ஆக இந்த ஹதீதில் எதிர்தரப்பினர் எண்ணிக் கொண்டிருப்பதைப் போல நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமக்கு நிழல் இருந்ததாகச் சொல்லவேயில்லை. இமாம்களான முபஸ்ஸிரீன்கள், முஹத்திஸீன்கள், முபக்கிஹீன்கள், ஞானவான்கள் போன்றோரை எல்லாம் ஓரங் கட்டி விட்டு குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் நேரடியான பொருளைச் சொல்ல முனைந்தால் சொல்லப்படும் பொருளுக்கும் அவ்வார்த்தைக்கும் அறவே தொடர்பிருக்காது என்பது மட்டும் நிச்சயம்.

**ஆதலால் அன்பான சகோதரர்களே!**

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதர் என்னும் எண்ணத்தை விட்டு விடுங்கள். மாறாக அவர்கள் மனித இனத்தாரிடையே ஒரு மனிதராக உருவகப்படுத்தப்பட்டு மனித இனத்தை நேர்வழிப்படுத்த இப்புவிக்கு அனுப்பப்பட்ட ஒரு புனிதராகும். அவர்கள் தான் அல்லாஹ்வால் முதன் முதலாகப் படைக்கப்பட்ட நூரே முஹம்மதியாகும்.

யா அல்லாஹ்! உனது ஹபீபின் பொருட்டால் இச் சிறியதோர் பணியை ஏற்றுக் கொள்வாயாக. இன்னும் இதுபோன்ற பணிகளை மேலும் மேலும் செய்வதற்குரிய திடத்தையும் மன உறுதியையும் தந்தருள்வாயாக. சர்வ சக்தனே! இந்நூலின் பொருட்டால் எங்களின் பெற்றோர், உற்றார், உறவினர், ஆசிரியர் போன்றோர் அனைவரின் மண்ணறைகளையும் ஒளிமயமாக்கி சுவர்க்கப் பூங்காக்களில் ஒன்றாக்குவாயாக. அத்துடன் எங்களை உனது நல்லடியார்கள் சென்ற பாதையிலேயே சதாவும் நிலைத்திருக்க நல்லுதவி புரிந்தருள்வாயாக. ஆமீன் பிஜாஹி ஸையிதில் முர்ஸலீன். ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மத் யாரப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்